ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# வேதாந்த தீபிகை

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 5.] ஆநந்த௵ மாசி௴ [ஸஞ்சிகை 1.

## பத்ராதிபரின் குறிப்புகள்.

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம்
ததாநே - வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே
ரதிரஸ்து மே(அ)நவத்யா ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

**ஸ்வபாவ பரித்யாகம்.**

ஸங்கீதம் ஸாஹித்யம், சில்பம், சித்ரம், நாட்யம், நாடகம் முதலானவை முற்காலத்தில் பரதகண்டத்தில் நாகரிக லக்ஷணங்களாகக் கொண்டாடப்பட்டன. இவற்றையெல்லாம், இங்கிலீஷ்காரரைப் பஹுமாநிக்க வெண்ணி இந்தியர் துறந்தார்களென்று ஆநந்த குமாரஸ்வாமி எனும் பண்டிதர் மொழிந்தாரெனக் கேள்வியுறுகின்றோம். இவற்றுடன் அத்தகைய பஹுமாந ப்ரயத்நம் நின்றுவிடவில்லை. உண்டி, உடை, நடை, பாவனை முதலான விஷயங்களிலும் இங்கிலீஷ்காரரைப் பஹுமாநிக்க அவர்போல் செய்ய ஆரம்பித்துவிட்டனர். படிப்பது இங்கிலீஷாக முடியவே, பேசுவதும் அந்தப் பாஷையாக வேண்டுமெனும் ப்ரயத்நமு முண்டாயிருக்கின்றது. பிறப்பால் வெள்ளைத் தோல் ஒன்று மாத்ரம் இங்கிலீஷ் படித்தவர்க்கு உண்டாகமாட்டாது.

இதர அம்சங்கள் யாவற்றுள்ளும் இவர் இங்கிலீஷ்காரராகப் பரிணமிக்கப் பரிணமிக்கச் சீர்படுவதாய் எண்ணுகின்றனர்.

ப்ராஹ்மணனுகப் பிறந்த ஓர் சிறுவன் தலையின் மயிரெல்லாம் வளர்த்துக் கத்திரித்துச் சித்திரித்து அழகுபெற்றதாய் எண்ணிக்கொண்டு தந்தைமுன் வந்து நின்ருனும். தந்தை அவனை நோக்கிப் பிள்ளாய்! இப்படிச் செய்யலாமா? என்றனராம். பேசினுல், மீசை வைத்துக்கொள்வேன், என்று சொன்னுன், சிறுவன். தந்தை மௌனம் வஹித்தனராம். பின்னெரு நாள் வாய் நின்று பீடியின் தூமம் வெளிக்கிளம்பத் தந்தைமுன் விளங்கினனும். இது உனக்குத் தகாதென்றனராம் பெற்றவர். பேசினுல், புகையிலைச் சுருட்டை வாயில் கொண்டு அதன் தூமத்தால் உமது முகத்தைச் சுடுவேன் என்ருனும் குமாரன். தந்தை யேன் மீளவும் பேசுவார்?

சில தகப்பன்மார் இவ்வளவாகிலும் குழந்தை வ்ருத்திக்கு வந்தானே என்று களிப்பர். குழந்தைகள் வ்ருத்தியடையும்வகை, பாாு பக்ஷயாதிகள் புதியவையாக அப்யஸிக்கப் படுகின்றனவாம். அதை இவ்விடம் யோசித்தல் வேண்டா மென்று எண்ணுகின்ருேம்.

**இந்திய கலா ஸங்கங்கள்.**

இந்தியாவில் யூநிவர்ஸிடி எனப் பெயர்கொண்ட கலா ஸங்கங்கள் இதுகாறும் வளர்ந்த படியை உகக்காமல், இராஜாங்கத்தவரும், அறிந்தவரெனக் கொண்டாடப்பட்ட பெரிய மனிதர்களும், அவற்றிற்கு நூதனமான ஆகாரங்களை அமைக்க நினைக்கின்ருர்கள். இந்த விஷயத்தில், தத்காலம் இந்தியாவுக்கு ப்ரயோஜநாந்தரத்தை உத்தேசித்து வரவழைக்கப்பட்ட வித்வான் கெட்டஸ் என்பவரை இந்தத் தேசத்துக்குப் பொருந்திய வண்ணம் உத்க்ருஷ்டமான கலாஸங்கம் இருக்கவேண்டிய ப்ரகாரத்தைப் பற்றி ஒரு இந்தியர் கேட்கவே, அந்த வித்வான், தான் பல தேசங்களிலும் கண்ட முறைகளையும், இந்தத் தேசத்தின் அபேக்ஷிதங்களையும் ஆலோசித்து, தமது நண்பர்க்கு ஓர் நிரூபம் எழுதினுர். அது ஜனவரி மாதம் 28௳ ஹிந்து பத்ரிகையில் ப்ரசுரப்படுத்தப்பட்டது. அதனின்று அவர் மொழிந்த சில விஷயங்களை இவ்விடம் காட்டுகின்ருேம்.

"கல்வி கற்க இந்தியர் எங்களிடம் ஸர்வப்ரகாரத்தாலும் வரட்டும். அவர் அப்படி வரவேண்டியது ந்யாயமே. பஹு விஷயங்களை நாங்கள் அவர்க்குக் கற்பித்தல் வேண்டும். ஆனால் வேட்டையிலோ, விளையாட்டிலோ, உத்யோகம்செய்தோ, கிறிஸ்தவனாகியோ, எங்களுடைய பரமய்ஸாம்யம் அடைவதற்காக இந்தியர் எங்களிடம் கற்கவேண்டிய தென்று யான் மொழிவேனல்லன். இந்தியர் விஷயமாக எங்கட்குள் மரியாதை வளர, விளையாட்டில் எங்களிலும் சிறப்புற்ற ரணஜித்ஸிங்க் ராஜகுமாரன் காரணமாயினன். புத்தரைப்போல் ஒருவர் எங்கள் தேசம் இப்போது வந்தாலும், இங்கிலீஷ்காரர் இந்தியரை அவ்வண்ணம் மதிக்கமாட்டார். ஆகிலும் ரணஜித்ஸிங்க் அவரது பாரம்பர்யமான கொள்கைகட்கும், அவர் பெரியோர் பரமபுருஷார்த்தமென விச்வஸித்தவைகட்கும் புறம்பான கல்வியால் மூடப்பட்டவரன்றோ? கல்வியிலும் விளையாட்டிலும் எம்மைப்போல் இந்தியர்களை ஆக்கி, அவர்க்குரிய அபேக்ஷிதங்களில் அவர்க்கு அத்ருப்தியை யுண்டாக்குதல், எங்கட்கும் இந்தியர்க்கும் அபாயத்தை விளைவிக்கும். இதற்காக, இந்தியர்க்குக் கல்வியே தராமல், அஜ்ஞானத்தை நிலைப்பிக்கச் சிலர் யோசிப்பவரும் உண்டு. அது மூட ப்ரயத்நம்".

"ஆதலால், உண்மையில் ஆழ்ந்ததும், இயல்பாக வளரத்தக்கதுமான இந்திய கல்வி இந்தியர்க்கு அளிக்கத்தக்கது. அவருடைய பரம்பராகதமான வித்யையுடன், ப்ரயத்ந ஶீலநத்தை ப்ரகாஶிப்பிக்கும் பச்சிம வித்யையும் ஒன்றிச் சேர்ந்ததாகில், அது இந்தியாவுக்கு நன்மை தரும்".

"எங்கள் மநஸ் முக்யமாக விஷயாஸக்தம். உங்களுடையதோ விசேஷமாக அந்தர்த்ருஷ்டியில் ப்ரவணித்தது. உங்கட்குள்ளும் யுத்தங்களில் ஜயங்கொண்ட ராஜர்களும், உலக வழக்கில் ஜ்ஞாதாக்களும் இருந்தனர். எங்களிலும் தத்வவிசாரத்திலும், தத்வசிந்தநத்திலும் சிறந்தவர் உண்டு. ஆனால், ப்ரயத்நம், அதிகாரம், வர்த்தகம், ராஜதந்த்ரம், செல்வம், அரசாட்சி இவை எங்கட்குக் களிப்பைக் கொடுக்கின்றன. இந்த விதமாகத்தான் எங்கள் சரித்ரம் வளர்ந்தது. ஸாத்விக தர்மங்களும் விவித தர்ஶநங்களும் உங்களை ஆகர்ஷித்தன. எங்கட்கு தநமும் ஆரோக்யமும் வேண்

டும். நல்ல வீடுகள், நல்ல உணவுகள், இவை என்றும் நிலைத்தி ருக்க வேண்டிப் பூமியின்கண் விளையும் பொன்னையும் பொருள் களையும் எங்கள் நாட்டிற்குக் கொண்டு சேர்க்கின்றோம். நீங்கள் ஸ்வலாப ஸந்துஷ்டர்கள்; த்யாகத்தால் புசித்துச் சரீரஸுகத் தைத் தேடுகின்றவர்கள். மனிதரையும் ம்ருகங்களையும் நாங்கள் ஜயிக்க இச்சிக்கின்றோம். அவற்றுள் நிற்கும் ஆத்மதத்வத்தை நீங்க ளறிவீர்கள். பொருள்தேடும் வித்யையை நாங்கள் வேண்டு கின்றோம். ஆத்மவித்யையை நீங்கள் அபேக்ஷிக்கின்றீர்கள். பதார் த்த ஶாஸ்த்ரங்கள் கற்றுச் சரீரங்களை நாங்கள் சேதித்தோம். ஸ்தாவரங்களை வகுத்துப் பேரிட்டோம். ஆனால் உங்களது ஆல யங்களில் மூடமாகக் காப்பாற்றப்பட்ட ப்ரதீகங்களில் ஜீவனுடன் கூடிய ஸர்வ வஸ்துக்களுடையவும் ஜந்மம், வ்ருத்தி, க்ஷயம் முதலானவற்றின் ரஹஸ்யங்கள் காப்பாற்றப்பட்டன. ஜநந மரண தர்மங்களை யடைந்தவற்றின் ரூபங்கள் எங்கட்கும், அவற்றின் உண்மையான தத்வங்கள் உங்கட்கும் புலப்படுகின்றன. புல்லி னின்று புஷ்பமும், ஓர் குற்றுயிர்நின்று குதிரையும் பரிணமிக் கும் ப்ரகாரங்களனைத்தும் நாங்கள் சொல்வோம். நீங்கள் ப்ர ஹ்மத்தினுடைய முதல் நிஶ்வாஸத்தை க்ரஹித்தீர்கள்; ப்ராணி களின் உத்பத்தி, ஸ்திதி, நாஶம், புநர்ஜநநம் இவற்றின் ப்ரவா ஹங்களைப்பற்றி விஶதமாயும் விஸ்தாரமாயும் நீங்கள் விவரித்த படி மற்றெவரும் செய்ததில்லை. பூமியின் உள்வரிசைகளையும், அவற்றில் மறைந்திருந்த அபூர்வ ஜெந்துக்களின் அமைப்புகளை யும் நாங்கள் வெளிப்படுத்தினோம். உங்களுடைய ப்ராசீந க்ரந் தங்களில் புவநங்களின் உத்பத்தி க்ரமங்களைப்பற்றி ப்ரஸ்தாபம் உண்டு. உங்களுடைய பழைய காவ்யங்களையும் ஸாமாந்ய விஶேஷ ஶாஸ்த்ரங்களையும் உமது பெரியோரைப்போல் நீவிரும் கற்று எங்களுடைய நுட்பமான புத்திக்கு விஸ்தாரத்தை உண்டு பண்ணுங்கள்.''

''யந்த்ரங்கள் ஸஹாயத்தினால் விஸ்தரித்த கைத்தொழில்களை உமக்கு நாம் கொண்டுவந்து தந்தோம். காற்றைப்போல் நெய்த நுட்பமான ஆடையும், நிகரற்ற பட்டு வஸ்த்ரங்களும், விலையற்ற ரத்ந கம்பளங்களும் உமக்கு முன்பே உண்டு. சித்ரமெழுதுவதி லும் ப்ரதிமைகள் அமைப்பிலும் உங்களில் யாம் சிறப்புற்றோம். தொன்றுதொட்டு இதுவரையிலும் கட்டிடங்கள் கட்டுவதில் நீங்

கள் எங்களில் மிக்கவரே. கண்கள் காணும் அழகும், ஒளியும் எங்கட்குக் களிப்பைத் தருகின்றன ; அழகெனப்படுவதின் ஸூக்ஷ்மார்த்தமும், உலகின் இயல் பரிணமிக்கும் ப்ரகாரமும் உங்கள் ஹ்ருதயங்களில் ஆழ்ந்து நிலைத்திருக்கின்றன. பதார்த்த ஶாஸ்த்ரங்களும், அவற்றால் வஸ்துக்களை அளத்தலும் நிறுத்தலும், பதார்த்தங்களின் பிரிவுகளும், அவற்றின் அம்ஶங்களை வெவ்வேறு விதமாகப் பரிணமிக்கச் சேர்த்தலும், இன்னும் எங்களுடையதே. எங்களிடம் வந்து இவற்றைக் கற்றுக்கொள்ளுங்கள். ஆகிலும் உமது ப்ராசீநமான நுண்ணிய அறிவால் ப்ரக்ருதியெனப் பட்டதின் ஸூக்ஷ்மங்களை உமது முன்னோர் அறிந்தவண்ணம் அறிவதையும், அதை உட்புகுந்து, அதனுடைய ஸர்வாவஸ்தைகளிலும் இடைவிடாது அதனுடன் பொருந்திநின்ற ஶாஶ்வதமான ஶக்திவிசேஷத்தைத் தர்சிக்கும் திறனையும் நீவிர் விடவேண்டாம். ஜ்யாமெட்ரியெனும் அளவுஶாஸ்த்ரத்தில் உம்மிலும் யாம் மிகுந்தோம். பீஜகணிதத்தை அராபியர் உம்மிடம் கற்று எமக்குத் தந்தனர். ஈஶ்வரன் இவ்விதம் நம்மிருவரையும் பிரித்தனன். ஸ்தூலாகாரங்களை நாம் பகுத்தறிவோம். அவற்றின் ஸூக்ஷ்மாம்ஶம் உங்கள் புத்திக்குப் புலப்படுகின்றது. ஆகாஶத்தை நாங்கள் அளந்து ஆள்வோம். காலத்தின் தத்வத்தை நீங்கள் பகுத்தறிந்தீர்கள். க்ரீக் பாஷையின் க்ரந்தங்களால் ஐரோப்பியர் ஜ்ஞாநமறிந்தனர். ஸம்ஸ்க்ருத க்ரந்தங்களைப் பரிசோதித்து இன்னும் அவர் தத்வநிலைகளைத் தெரிந்துகொள்வார். நம்மிருவர் கல்விகளும் சேராமல் இருவரும் க்லேசித்தோம். வெளிப்படையான வஸ்துக்களில் எமது புத்தியைச் செலுத்தி, ஆத்மாவின் உண்மையை யாம் கண்டுகொண்டோமில்லை. நீங்கள் ஆத்ம தர்சநத்தில் ஆழ்ந்து, உலகத்தை த்யஜித்து மறந்தும் விட்டீர்கள். உலகத்தை யெல்லாம் வசப்படுத்தி, உயிரை நாம் இழந்தோம். மௌநத்தில் நீர் ஆழ்ந்து, உமது ஆத்மாவை ரக்ஷித்தீர்கள். மற்றது அற்றதால் நீங்கள் குறைகொண்டீரில்லை. நாமிருவரும் ஒருவர்க்குரியதை மற்றவர்க் கீந்து, இருவரும் குணப்படல் ந்யாயமன்றோ? இதுவரையில் உமைப் படிப்பிப்பதில் யாம் மோசம் போனோம். இனி ராஜகுமாரர்களைப் பள்ளிக்கூடப் பிள்ளைகளாக்குவதையும், பண்டிதராகத்தக்கவரை பீ-ஏ-க்களாக்குவதையும், பெங்காளிபாபுக்களைக் கணக்குப்பிள்ளைகளாக்குவதையும்,

வேளாளரைக் கூலியாட்களாக்குவதையும் விட்டொழிவோம். ஒருவர்க்குள்ளதை மற்றவர்க்கீந்து, இருவரும் இருவகையிலும் சிறப்பதைவிட்டு, ஒருவரை மற்றவராக மாற்றுதல் நலமன்று. விஸ்தரித்தும், விசேஷித்தும் உமது முன்னோர்களால் நீண்டகாலமாக ச்ரமப்பட்டு ஸாதித்தவையும், உமது தேசத்திற்குப் பொதுவாகவும், அதனிடம் உள்ள ஒவ்வொரு ஸமுதாயத்திற்குத் தனிப்படையாகவும், தாயாக்ரமத்தில் வந்தவையுமான வித்யைகளையும், நாகரிகத்தையும் நீங்கள் த்யாகம் செய்வதற்கும், அழிப்பதற்கும் ஏற்ற ப்ரயத்நம் செய்கின்றவரும், ஆலோசிக்கத் திறனற்றவருமான ஸ்கூல் வாத்யார்கள், காலேஜ் ப்ரோபெஸர்கள், பாதிரிமார்கள், முதலியோர் முன் செய்த வண்ணமும், இன்னும் செய்கின்ற வண்ணமும், உமது ஸமவாயமும், உமக்குள் ஒவ்வொருவரும் ஆத்ம குணங்களைப் பறிகொடுத்து, யாவரும் நாசமடையப்போகும் மார்க்கத்தை நன்கமைத்து, அதனில் உம்மை இழியச்செய்கின்றன. ஆதலால் உமது பழமையைப் பாதுகாத்து, அதை அநுஸரித்து, அதைச் சீர்படுத்தியும், விஸ்தரித்தும் உமக்கது நன்மையளிக்கச் செய்தலன்றோ உமது கலாஸங்கங்களின் கருத்தாக வேண்டும்."

என்றிவ்விதமாகவும், இன்னும் பலவிதமாகவும், நமக்குள் இல்லாத நன்மைகளை ஐரோப்பியரிடம் நாம் அறியவேண்டுமென்றும், அதனிமித்தம் நமது பெரியோர் ஆர்ஜித்த வித்யாதநத்தையும், ஆத்மகுண பூர்த்தியையும் நாம் பறிகொடாது, அதையும் காக்கும் வண்ணம் நமக்குள் வித்யாவ்ருத்தி யமையவேண்டுமென்றும் அந்த வித்வான் மனம்பட மொழிந்தனர்.

வித்யாபேத காரணம்.

𑌪𑌰𑌾𑌂𑌚𑌿 𑌖𑌾𑌨𑌿 𑌵𑍍𑌯𑌤𑍃𑌣𑌤𑍍𑌸𑍍𑌵𑌯𑌂𑌭𑍂𑌃
𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌪𑌰𑌾𑌙𑍍 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 𑌨𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌤𑍍𑌮𑌨𑍍 ।
𑌕𑌶𑍍𑌚𑌿𑌦𑍍𑌧𑍀𑌰𑌃 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌗𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑍈𑌕𑍍𑌷𑌤𑍍
𑌆𑌵𑍃𑌤𑍍𑌤𑌚𑌕𑍍𑌷𑍁𑌰𑌮𑌮𑍃𑌤𑌤𑍍𑌵𑌮𑌿𑌚𑍍𑌛𑌨𑍍 ।

"ஈச்வரன் வெளிவஸ்துக்களை ப்ரகாசிப்பிக்கின்றவையாக இந்த்ரியங்களை நிர்ப்பந்தப்படுத்தினர். (அதாவது, ஸ்ருஷ்டித்தார்.) ஆதலால் பாஹ்யவஸ்துக்களைப் பார்க்கின்றனர். அந்தராத்மாவைப் பார்க்கின்றாரில்லை. விவேகியான ஒருவன் கண்முதலான இந்த்ரியங்களை விஷய க்ரஹணத்தினின்றும் விலக்கி, அம்ருதமெனும்

மோக்ஷப்ராப்தியை இச்சித்தவனுய்க்கொண்டு, தனக்குள் தனது ஆத்மாவைப் பார்க்கின்ருன்.”

இது ப்ʼருதிவாக்யம். ப்ராயேண ஐரோப்பியர் தம்முடைய இந்த்ரியங்கள் போனபடி பாஹ்யவஸ்து க்ரஹணத்திலும், தத் பராமர்ஶத்திலும் சதுரர்களாய் நின்று, அவற்றை ஸ்வாநுபவங் களுக்கு யோக்யமாகச் செய்கின்றனர். நமது முன்னேரோ, ப்ரா யேண விஷயங்களினின்றும் தமது இந்த்ரியங்களைத் திருப்பி, அந்தராத்ம தர்சநத்தில் ரமித்து, அதனுடைய ஸ்வரூபப்ராப்தி நிமித்தம் ப்ரயாஸப்பட்டனர். உலகத்தை அடைந்தநுபவிக்கும் முயற்சியில் உயிரை இழக்கப்போகின்ற நம் சிறுவரை நோக்கி, பஹு ஐரோப்பிய வித்வான்கள் மேல்விவரித்த மாதிரியாக மதி யளித்தும், ஐரோப்பிய ஸாமாந்யர் ஸஹவாஸத்தால் நமது சிறு வர் ஆத்மநாச முயற்சியை விட்டொழிகின்ருரில்லை.

**ஸஹவாஸ தோஷம்.**

ஸஹவாஸதோஷம் மிகவும் பெரிது. கிறிஸ் டியன் காலேஜில் படிக்கும் பிள்ளைகளில் சிலர் ஓர்கூட்டம் கூடினராம். அந்தக்கூட்டத்தில் ஓர் சிறுவன், (அவன் ப்ராஹ்மணனுகப் பிறந்திருக் கக்கூடும்.) உண்டியையும், உடையையும், நடையையும், நம்பிக் கைகளேயும், படிப்பையும், பாஷைகளேயும், மதத்தையும், மற்றவை யையும், இங்கிலீஷ்க்காரர்போல் ஹிந்துக்கள் மாற்றுவதைப் பற் றிப் புகழ்ந்துபேசி, இவ்வளவு மாறுபாடும் தன்னே அநார்யனுகச் (Denationalize) செய்யாதென்றும் வெளியிட்டானும். Nationalize என்ருல் to give the character and habits of a nation to - என்று பொருள்பொருந்தும்; அதாவது ஒரு ஜாதியருடைய குணங்களேயும் ஆசாரங்களேயும் மேற்கொளல். ஆதலால் மேற் கூறிய வண்ணம் பேசிய பிள்ளே, தான் மாற்ற இச்சித்த ஸ்வ ஜாதிக்குரிய குணங்களேயும், ஆசாரங்களேயும், நம்பிக்கைகளேயும் மாற்றிவிட்ட பிறகு, எதனே ஆப்ʼரயித்துத் தன்பிறப்பைக் காட் டப்போகின்ருனே தெரியவில்லே. அவனது நிறம் வெள்ளேக்கா ரர் நிறமாகாது; அவனது சர்மமும் கறுத்துத் தான் கிளம்பும். இவற்ருல்தான் இவன் இந்தியனுக நிற்றல்கூடும். ஆனல் தாரு தத் என்னும் சிறுமியும், காளிசரணபாநர்ஜி எனும் பங்காளியும், கிறிஸ்தவராக இருந்தும், இந்தியராக நின்ருரென்று கூறினன். மைகல் மதுஸூதந தத்தரெனும் கிறிஸ்தவரையும் அவன் சொல்லி

யிருக்கலாம். காளிசரண பானர்ஜியினுடைய இந்த்யத்வம் நாஷ னல் காங்க்ரஸ் ஸபையில் மாத்ரம் ப்ரகாசித்தது. மற்ற இருவ ரும் புஸ்தகங்கள் எழுதுங்கால், ஆர்ய சரித்ரங்களை ஸ்மரித்து உருகிப்போனார்கள். வணங்கப் போகுங்கால் யூதர் கதைகளை நம்பி னார்கள். வினைக்குப் பலஸ்தின தேசமும், விளையாட்டிற்கு ஆர்யா வர்த்தமும் அவர்க்கு உதவின. இப்படியன்றோ அச்சிறுவன் ஸ்வ ஜாதியைக் காக்க உகந்தான்.

அந்தக் கூட்டத்தில் இதர சிறுவர்கள் அவன் எண்ணிய படி எண்ணினரில்லை யென்பது நமக்குக் கிஞ்சித் ஆச்'வாஸ ஹேதுவாகின்றது. அந்தக் கூட்டத்தில் அத்யக்ஷஸ்தானம் வஹி த்த ஆர்தர்டேவிஸ் துரையவர்கள், இங்கிலீஷ் படிப்பதின் பயன் இந்துக்கள் அகாரண விச்'வாஸங்களை (Superstitious beliefs) நிவர்த்திப்பதென்று மொழிந்தனராம். தெரியாத அம்சங்களில் நம் பிக்கையும், அஜ்ஞானத்தில் ஜனித்த விச்'வாஸங்களும் மேலெழு திய இங்கிலீஷ் சப்தார்த்தமாகின்றன. இந்த விதமான நம்பிக் கைகள் நமக்குத்தான் உண்டோ? ஐரோப்பியர்க்கிலதோ? அவர் க்கு எதைப் படித்து அவை நிவர்த்திக்கப்போகின்றன? இவ் வித விச்'வாஸங்கள் கிறிஸ்தவர் மதக்ரந்தங்களில் பெருக வில் லையோ? இவற்றை நன்றாக அந்தத் துரை யோசித்தாரோ?

மேலே நாம் ஸ்மரித்த சிறுவனைப் பெற்றவர், இவ்வளவு பரிபாகமடைந்த தம் புதல்வனைப்பற்றி என்னெண்ணுவரோ? பெற் றார், வளர்த்தார்; அவனைப் பள்ளிக்கூட மனுப்பி இங்கிலீஷ் கற்பிக்கத் தம் வயிற்றையும் எம்மட்டும் வஞ்சித்தனரோ? எல்லாம் அவனுக்கு ஓர் ஜீவனோபாயம் உண்டாக்கித் தாம் ஸுகிக்க எண்ணிச் செய்தார்களன்றோ? அவன் கிறிஸ்தவனாகி, டொப்பி தரித்துச் சட்டைக்காரனெனத் தம்முன் விளங்கினானாகில் அவர் குடல் கொதிக்காதோ? இதனோடு அவனுக்கோர் கன்னிகையும் பெண்டாட்டியாக இருந்தாளாகில், அவள் மதத்தையோ மான த்தையோ இழக்காமல் உயிர்வாழ்தலுண்டோ? இப்படிக்கன்றோ காலம் பரிணமிக்கின்றது. அதன் கமனத்தை யார் தடுக்கக்கூடும்?

ப்ரௌடா விவாஹமும், விதவா விவாஹமும், ஆர்யநாட்டில், த்விஜர்க்குள்ளும், அவனை அநுஸரித்து ஆசரித்த மற்றோர்க்குள்ளும், நீண்டகாலமாக இல்லை. இப்படிப்பட்ட ஸ்த்ரீகட்கு விவாஹநிஷேதம் ஶிஷ்டாசாரமாக வழங்கித் தர்மஶாஸ்த்ர ரூபமாகவும் பரிணமித்தது. ப்ராசீந காலங்களில், இந்த ரூபமான விவாஹங்கள் க்வசித் க்வசித் வழங்கி வந்தன. கந்யாவிவாஹம் வைத்ய ஶாஸ்த்ரப்படிப் பெண்கட்கும், அவர் பால்யத்தில் பெறும் ப்ரஜைகட்கும், மிகவும் சரீரதுர்பல ஹேதுவாகின்றது என்றும், பள்ளிக்கூடங்களில் பெண்கள் படிக்கத் தடையாகின்றது என்றும் நிர்ணயித்த சிலர், தத்காலம் ப்ராஹ்மணர்க்குள் ப்ரௌடையான பெண்கட்கு விவாஹம் செய்தால், கோர்ட்டுகளில் அது அங்கீகரிப்படுவது ஸந்தேஹ விஷயமாயிருக்குமென்று யோசித்து, அவ்வித விவாஹம் சட்டப்படிச் செய்யலாமென்று ஏற்படவேண்டியது ஆவஶ்யகமெனக் கருதி, அதற்காக ஓர் சட்டத்தை அபேக்ஷிக்கின்றனர்.

**ப்ராஹ்மணப் பெண்களின் ப்ரௌடா விவாஹம்.**

நமது தேசத்தில் ஶிஷ்டாசாரம் ஏற்பட்டுத்தான் ஸ்ம்ருதிகள் ஏற்பட்டிருக்கவேண்டும். கந்யைகள் தவிர மற்ற ஸ்த்ரீகள் விவாஹ அநர்ஹரென்று யோசித்துத் தான், அவர்க்கு விவாஹத்தை நிஷேதித்திருப்பர். நம்பூரிகளில் ப்ரௌடா விவாஹம் நடக்கின்றது. பங்காளத்தில் குலீநரென்று முன் பெயர் வஹித்த ப்ராஹ்மணர்க்குள்ளும் ப்ரௌடைகள் கல்யாணம் நடக்கின்றது. நம்பூரிகளில் குடிக்கொருவன் மணம்புரிந்து, மற்றோர் ஶூத்ர ஸ்த்ரீகளுடன் ஸம்யோகிக்கலாம் என்னும் கட்டுப்பாடு, நம்பூரி ஸ்த்ரீகள் அனேவர்க்கும் புருஷர் கிடைப்பதற்கு அவகாஶத்தைக் கொன்றது. குலீநர் என்போர்க்கே யாவரும் பெண்களைக் கொடுக்க ப்ரயத்நப்படவே, ப்ரயோஜநம் பெருத்த விடங்களில் குலீந ப்ராஹ்மணர் ஸங்க்யையை மீறிப் பெண்களைக் கொண்டனர். இதன் பலனாக அவருடைய வீடுகளில் பொருள் கொண்டுவரச் சக்தியற்ற பெண்கள், விவாஹமின்றி இருந்துவிட நேர்ந்தது. இவ்விரண்டு காரணங்களும் நம்பூரிகளிலும், பங்காள குலீநர்களிலும் ப்ரௌடையான பெண்களை மணம்புரிவதும், மணமின்றி நிறுத்துவதுமாகிய வழக்கங்களை உண்டுபண்ணின.

இத்தகைய விஶேஷஹேதுக்கள் இல்லாமலிருந்தால், நம் பூரிகளுக்குள்ளும், பங்காள குலீந ப்ராஹ்மணர்க்குள்ளும், அந்யத்ர த்ருஷ்டமான ஶிஷ்டாசாரம் வழங்கிவந்திருக்கக்கூடும். ஆதலால் அவர் வழக்கத்தைக்கொண்டே அதை ஸர்வத்ர மாற்ற முயல்வது யுக்தமன்று.

ஆனால் ஸ்த்ரீகளுக்கும், ப்ரஜைகட்கும் சரீர தௌர்பல்யாதி ஸம்பவத்தை யோசித்தும், ஸ்த்ரீகட்கும் தக்க வித்யாப்யாஸத்துக்கு அவகாஶம் தரும்படியாகவும், தத்கால வழக்கத்தை மாற்றக்கூடாதோ வென்னில், மாற்றவல்ல அதிகாரிகளைக் கொண்டே அதை மாற்றவேண்டும். வேதமறிந்தவராகவும், தர்மத்திலும் லோகஹிதத்திலும் புத்தியைச் செலுத்துபவராகவும் இருக்கும் ப்ராஹ்மணரன்றோ ஶ்ருதி காட்டினபடிக் கர்மங்களிலும் வ்ருத்தங்களிலும் ஸம்சயம் உண்டாகுமளவில் ஸம்மர்ஶிகளா யிருக்கத்தக்கவர். இப்படிப்பட்ட அதிகாரிகளை இந்த ப்ரயத்நத்துக்கு ப்ரவர்த்தகராகக்கொண்டு, லௌகிகரான சட்டநிரூபணஸபையைச் சேர்ந்தவர்கள் ஆசாரவிஷயங்களில் மாறுபாட்டை உண்டாக்கத்தக்கவர். இப்படிப்பட்ட பண்டிதர் இவர்க்கு அகப்படமாட்டா ரெனக்கூடாது. சில காலத்தின்முன் காஞ்சீபுரத்தில் கூடிய வித்வத்பரிஷத்தில் ஆசாரசீர்திருத்த ஸபையார்க்கு அநுகூலரான பண்டிதர்களும் இருக்கின்றாரென ஏற்பட்டது. அந்தப் பண்டிதர்களும் 'ஶூத்³ரா ஸம்ஸ்கார்யா ஸம்ஸ்கார்யா பரோபகாரிணீ க்ஷத்ரதஃ' எனும் வண்ணம், வசநம் கொடுப்பதில் மாத்ரம் தம்முடைய ஸாமர்த்யத்தை முடிக்காமல், தாம் சொல்லும் வண்ணம் நடக்கவும் ஸாமர்த்யத்தை நன்றாகக் காட்டவேண்டும். கேவல லௌகிகர்கள் சேர்ந்து இவ்விஷயத்தில் சட்டம் செய்ய வாரம்பித்தல் உசிதமன்று. சட்டநிரூபண ஸபையோ, நம்மவரெனப்பட்ட சிலருடன் பல பாஹ்யரையும் சேர்த்து அமைக்கப்பட்டது. ஆர்யருடைய ஆசார சீர்திருத்தத்தில் அதற்கு ஸர்வதா அதிகாரமில்லை. அதிகாரம் வஹித்தால் அது பலாத்காரமாகத்தான் ஏற்படவேண்டும்.

ஆனால் இந்த ஆசாரபேதம் அபேக்ஷிப்பவர்க்கு உதவுமேயன்றி அந்யரைக் கட்டுப்படுத்தாது. அவ்வண்ணமே சட்டம் ஏற்படுமென்பார் சட்டரக்ஷகர்கள். அபேக்ஷிப்பவர் யார்? ப்ரௌடா விவாஹம் ப்ராஹ்மணர்க்கு மாத்ரம் ஶாஸ்த்ரத்தால் நிஷேதிக்கப்பட்டிருக்கிறது. ப்ராஹ்மணேதரர் யாதொரு சட்டத்தை

யும் அபேக்ஷிக்காமல் அவ்விவாஹம் செய்யலாம். இதை அபேக்ஷிப்பவர் ப்ராஹ்மணர் தாமோ என்று கிஞ்சித் யோசிக்கவேண்டும்.

இந்தச் சட்டத்தை ஆமோதித்தார் சென்னையில் மார்கழி மாதம் கூடிய ஸமவாய ஸங்கத்தார். அவர்க்குள் அக்ராஸநம் வஹித்த மைஸூர் யுவராஜர் ப்ராஹ்மணரா? அந்த ஸங்கத்தைச் சென்னைக்கு வரவழைத்த ஸபையார்க்கு அத்யக்ஷராயிருந்த ஸ்ரீநிவாஸய்யங்கார் ஜாதியென்பதே நிவர்த்யம் எனப் பேசினர். ஸங்கத்தாரும் ஸர்வவர்ணஸாங்கர்யத்தை வேண்டினவராய்க்கொண்டு வர்ணங்கள் நசிக்கவேண்டுமெனத் தீர்மானித்தனர். ஆதலால் ஜந்மாவசேஷப்ராஹ்மணராய் ஸங்கத்தை அலங்கரித்த சிலர், இந்தப் புதிய சட்டத்தை அபேக்ஷிக்கின்றனரோ? முன்பே தங் வங்கத்தை யடைந்திருக்கும் இவரது ப்ராஹ்மணத்வம் அவர் இச்சித்தவண்ணம் த்யாகத்தை ஸஹிக்கமாட்டாதோ? கிறிஸ்தவர், பௌத்தர், ப்ரஹ்ம ஸமாஜத்தினர், முதலானவர் அலங்கரித்த ஸங்கமா ப்ராஹ்மணர்க்குள் விவாஹ விஷயமான ஸம்சயத்தைப் போக்கவல்லது? சில காலத்துக்கு முன், சென்னை ப்ரஹ்ம ஸமாஜ மந்திரத்தில் சில பெண்மணிகள் சேர்ந்தனராம். சேர்ந்த அபிப்ராயமோ, ப்ராஹ்மணராகப் பிறந்து, அந்யருடன் ஸஹவாஸம் செய்த நிமித்தத்தால் ப்ரஷ்டராய்ப் போந்து, ப்ரிஸ்டல் நகரத்தில் மரணமடைந்த ராம்மோஹநராயர் ஜநந நாளையோ, மரண நாளையோ கொண்டாடுவது. இந்த ஸமயத்தை இழக்க மனமின்றி யப்பெண்மணிகளும், ப்ராஹ்மணப் பெண்கள் ப்ரௌடா விவாஹத்தை ஆமோதித்தனராம்.

சென்னை ஸமவாய சீர்திருத்த ஸபையாரோ, தமக்கு அத்யக்ஷராக ஒரு கனவானை உடைத்தாயிருக்கின்றனர். அவர் அபிப்ராயஸத்ருசமான ஆசாரங்களுடன் கூடினவராயினும், ஜந்மகாலத்தில் சூத்ர குலத்தில் உண்டானவர். தத்காலம் அவர் ஜாதிக்குரிய ஆசாரங்களை அதிக்ரமித்துப் பக்திஸாரன் அருளிச்செய்தபடிக்கு 'குலங்களாய வீரிரண்டி லொன்றிலும் பிறந்திலேன்' என மொழியத்தக்கவர். அவர் வெளிப்படையாக வர்ணாச்ரமவிரோதி. பிப்ரவரி மாதம் 12உ வெள்ளிக்கிழமையன்று தமது ஸபையாருடைய ஓர் ப்ரஸங்காவஸரத்தில், ப்ராஹ்மணர் புருஷார்த்தமெனக் கொள்வதெல்லாம் ஸமுதாய நன்மைக்கு விரோதமாகின்றபடியால், தமது ஸபையைச் சேர்ந்தவரெல்லாம் அவற்றை

முற்றிலும் பரிஹரிக்க வேண்டுமென அவர் மொழிந்ததாக, மறு நாள் மெயில் பேபரில் வெளிப்படுத்தப்பட் டிருக்கின்றது. அந்த ஸபையின் கார்யதர்சியோ, தான் பாப்டிஸ மடையாத கிறிஸ்தவ ரென்றும், தன்னைப்போல் ஏனையோரை மாற்றவே, தான் இன்னும் இந்துக்கள் கூட்டத்தில் நிற்பதாகவும் வெளிப்படுத்தி விட்டா ரென, 13உ ஹிந்து பேபரால் தெரியவருகிறது. இத்தகைய ஸபை யாரா ப்ராஹ்மணர்க்குள் விவாஹ விதியைப்பற்றிக் கருதத் தக்க வர்? இன்னும் ஆண்டர்ஸன் ஹால், டேனிஷ்மிஷன் ரீடிங் ரூம் முதலிய ஸ்தங்களில், ப்ராஹ்மணர்க்குள் ப்ரௌடா விவாஹம் நிர்ணயிக்கப்பட்டது. இனி மக்காவிலும், ரோமிலும் உள்ளவர் ஸங்கம் கூடி, ப்ராஹ்மணப் பெண்களுடைய ப்ரௌடா விவா ஹத்தை ஆமோதித்ததாகக் கவர்ன்மெண்டாருக்குத் தெரியப் படுத்துவது தான் சேஷமாய் நிற்கின்றது.

ப்ராஹ்மணரெனப் பெயர்கொண்டு ப்ரௌடாவிவாஹ சட்ட த்தை அபேக்ஷிப்பவரை யாம் கேட்பதொன்றுண்டு. உம்மில் ஸமவாய ஸங்கத்தார் முடித்த வர்ணஸங்கரதீர்மானத்தில் கலக்கா தவர் எத்தனை பெயர்? அப்படிக் கலக்காதவருள், பக்ஷ்யபானாதி களிலும், வர்ணாச்ரமோசித கர்மாநுஷ்டானங்களிலும், ப்ராஹ் மணனுக்குரிய நிலைமையை விட்டு நீங்காதவர் எத்தனை பேர்? ப்ராஹ்மண ஸமூஹத்தைத் தூஷிக்காதவர் எத்தனை பேர்? இப் படி அவ்வவர் ஹ்ருதயத்தை அவ்வவர் புத்தியால் சோதித்துப் பார்த்து விட்டுத் தான் ப்ராஹ்மணனென்றும், தானும் தனது வம்சமும் ப்ராஹ்மணனாகவே யிருக்கவேண்டுமெனவும் விச்வா ஸம் குடிகொண்ட ஹ்ருதயத்தினர் ஸங்க்யை ஏற்பட்டதாகில் ப்ரௌடாவிவாஹத்தில் முயற்சியானது ப்ராஹ்மணர்க்குள் எம் மட்டும் உளது என்பது ஏற்பட்டுவிடும்.

ஆபஸ்தம்பர் முதலானவர் காலம் 2400 வருஷங்களுக்கு முற்பட்டதென ஐரோப்பியருள் ஸம்ஸ்க்ருதம் அறிந்தவர் ஒப்புக் கொள்கின்றனர். மநு ஸ்ம்ருதியும், 2000 வருஷங்களுக்கு முற் பட்டதென்று அவர்கள் யோசிக்கின்றனர்கள். தர்மசாஸ்த்ரங்கள் அவையுண்டாவதற்கு முன்னமே சிஷ்டாசாரமாக ஏற்பட்டவை களைத் தான் சிஷ்டாசாரமாக விதிக்கின்றன. இப்படி அநாதி காலமாக ப்ராஹ்மணர்க்கென ஏற்பட்ட சிஷ்டாசாரத்தை ஸம வாய சீர்திருத்த ஸபையார், ப்ரஹ்ம ஸமாஜத்தினர், கிறிஸ்

தவர், ப்ராஹ்மணேதரர்கள் முதலானவர்களை ஸஹாயமாகச் சேர்த்துக்கொண்டு சில ப்ராஹ்மணரெனப்பட்டவர் மாற்ற முயல்வது, ‘ஊதத்ர ப்ராஹ்மணா ஸம்ஶிதவ்ரதா:’ எனும் ச்ருதி வாக்யத்தை அபலாபம் செய்ய முயல்வதன்றோ?

பிராஹ்மணன் என்பவன், குலம், வ்ருத்தம், ஸ்வாத்யாயம், ச்ருதம், இவற்றுடன் யதோசிதம் கூடி நிற்பவன். இவை நிந்தார்ஹமானவர்க்குச் சட்டம் வேண்டுமோ? இவற்றுடன் கூடினவரும், ச்ருதி ஸ்ம்ருதிகளுக்கு அவிரோதமென்று நினைத்து ப்ரௌடா விவாஹத்தைச் செய்தாராகில் செய்யட்டும். சட்டம் வேண்டுவானேன்? பம்பாய் பங்காளம் முதலான தேசங்களில் ப்ராஹ்மண ரெனப்பட்டவர் அத்தகைய விவாஹம் செய்கின்றார்களெனக் கேள்வியுறுகின்றோம். இந்நாட்டிலும், தாம், ப்ராஹ்மணரெனும் அபிமாநத்தை விட்டொழியாத சிலர், ப்ரௌடா விவாஹம் செய்கின்றார்கள். ஆதலால் இந்த விவாஹத்தை அபேக்ஷித்தவர் தாமும் செய்யக்கூடாதோ? சட்டம் வேண்டுவானேன்? எங்காவது கோர்ட்டுகளில் இந்த யோசனை ஸாக்ஷாத்தாக ஸம்பவித்தவளவில், ப்ரௌடா விவாஹம் செல்லாது என்று அபிப்ராயம் உண்டாயிற்றோ? தத்காலம் ஹைகோர்ட்டை அலங்கரிக்கும் ப்ராஹ்மண ஜட்ஜி ஒருவர் சட்டாபேக்ஷையின்றித் தன் மகனுக்கு ப்ரௌடையான பெண்ணை மணம் புரிவித்தாரில்லையோ! அந்தக் கோர்ட்டில் தத்காலம் நிற்கும் இதர ப்ராஹ்மண ஜட்ஜிகளும் ப்ரௌடா விவாஹம் வ்யவஹார விரோதமென்று எண்ணுவாரில்லையே! இஷ்டமானவர் அவ்விதம் நடக்கக்கூடுமே. இது வ்யவஹாராநுகுண்யம் அன்று என ஸம்ஶயம் ஜநிக்கத்தக்க ஹேதுக்கள் இல்லாமலிருக்க, ஒரு வர்ணத்தார் தர்மமென்று கொண்ட முறைக்கு விரோதமாக, மதவிஷயத்திலும் தர்ம விஷயத்திலும் உதாஸீநர்களான ராஜாங்கத்தாரையும், ஸர்வ மதஸ்தரும் சேர்ந்த சட்டநிருபண ஸபையாரையும் இந்த விஷயத்தில் நிர்ப்பந்திப்பதேன்? தேவஸ்தாந த்ரவ்யங்கள் லௌகிக வித்யாப்ரசாரத்துக்கு உதவும்படிச் சட்டம் செய்தவண்ணம், ப்ரௌடா விவாஹசட்டமும் செய்துவிடலாமென்று யோசித்தபடியோ? தேவஸ்தாநாபிமாநிகள் முன்பு தூங்கினார்கள். இப்போது ஜநங்கள் யாவரும் தூங்கவில்லையே! ப்ராஹ்மணரெனப் பெயர்கொண்ட வித்வான்களையும், இங்கிலீஷ் பரிசயமில்லாதவரையும் கேட்டால், நூற்றுக்கு ஒருவன் ப்ரௌடா விவாஹ சட்டத்தை ஸஹிப்பனோ?

'𑌅𑌨𑍍𑌯𑌚𑍍𑌛𑍍𑌰𑍇𑌯𑌃, 𑌅𑌨𑍍𑌯𑌦𑍁𑌤𑍈𑌵 𑌪𑍍𑌰𑍇𑌯𑌃, 𑌤𑍇 𑌉𑌭𑍇 𑌨𑌾𑌨𑌾𑌰𑍍𑌥𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌸𑌿𑌨𑍀𑌤𑌃 । * * * 𑌶𑍍𑌰𑍇𑌯𑌶𑍍𑌚 𑌪𑍍𑌰𑍇𑌯𑌶𑍍𑌚 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌮𑍇𑌤𑌃, 𑌤𑍌 𑌸𑌮𑍍𑌪𑌰𑍀𑌤𑍍𑌯 𑌵𑌿𑌵𑌿𑌨𑌕𑍍𑌤𑌿 𑌧𑍀𑌰𑌃 । 𑌶𑍍𑌰𑍇𑌯𑍋 𑌹𑌿 𑌧𑍀𑌰𑍋𑌽𑌭𑌿𑌪𑍍𑌰𑍇𑌯𑌸𑍋 𑌵𑍃𑌣𑍀𑌤𑍇, 𑌪𑍍𑌰𑍇𑌯𑍋 𑌮𑌨𑍍𑌦𑍋 𑌯𑍋𑌗𑌕𑍍𑌷𑍇𑌮𑌾𑌤𑍍 𑌵𑍃𑌣𑍀𑌤𑍇' ॥ "ஶ்ரேயோரூபமான மோக்ஷம் வேறு. போகரூபமான ப்ரியங்கள் வேறு. அவை பிந்நங்களான ப்ரயோஜநங்களைத் தருகின்றனவாய்ப் புருஷனைக் கட்டுகின்றன. இப்படி மநுஷ்யனை ஆஶ்ரயிக்கின்ற ஶ்ரேஸ்ஸையும் ப்ரேயஸ்ஸையும் நன்றாக ஆலோசித்துப் புத்திமான் விவேசநம் செய்கின்றான். அப்படி விவேசநம் செய்து புத்திமான் ப்ரேஸ்ஸைக்காட்டிலும் வரணீயமென்று ஶ்ரேயஸ்ஸையே வரிக்கின்றான். அல்ப புத்தியுடன் கூடினவன் யோகக்ஷேமார்த்தம், (சரீரஸுகத்தையும், பசுபுத்ர தநாதிகளையும் விரும்பி) ப்ரேயஸ்ஸை வரிக்கின்றான்." இப்படியன்றோ ஶ்ருதி சொல்லிற்று ?

ப்ராஹ்மணரான மஹர்ஷிக்கள் தம் குலத்தினர் ஶ்ரேயஸ்ஸையே அடையவேண்டுமென்றும், ப்ரியரூபமான காமங்களை த்யஜிக்கவேண்டுமென்றும், கருதித் தமது வம்சஸ்தர்க்குக் கல்பித்த விதிகளை, ப்ரியரூபமான காமங்களை விரும்பியவர்கள், ப்ராஹ்மணத்வத்தை விட்டும், விடாமலு மிருந்துகொண்டு, ப்ராஹ்மணேதர ஸஹாயிகளாய்ப்போந்து, சட்டநிரூபண ஸபையின் அதிகாரபலத்தைக் கைக்கொண்டு, அதிலங்கநம் செய்ய யோசித்தல், கலிபுருஷன் விடம்பநத்தை ப்ரகாசிப்பிக்கின்றதே யொழிய வேறில்லை.

ப்ரக்ருத ஆசாரங்களை அபிமாநித்தவர் அவற்றை விடவேண்டாம்; இந்தச் சட்டம் அவரைப் பாதிக்கவில்லையே எனக் கேட்பாருண்டு. திருப்பதி தேவஸ்தாந ஸ்கூல்கள் விஷயமான சட்டம் ஏற்பட்டது. அதை விரும்பியவர்கள், அந்தக் கோவிலின் மிகுதி த்ரவ்யத்தையும், இதர கோவில்கள் த்ரவ்யத்தையும் ஸ்கூல்கள் நிமித்தம் செலவிட அபேக்ஷிக்கின்றனர்; அவ்விதமாகப் பத்ரிகைகளில் தமது அபிப்ராயத்தை வெளியிடுகின்றனர். வர்ணாஶ்ரமிகளுடைய தர்மவிஷயமாக ஓர் சிறிய சட்டம் பிறந்ததாகில், பெரிய சட்டம் பிறக்க ப்ரயத்நம் தானே உண்டாகும். அப்படி எந்தச் சட்டமாவது பிறத்தல் யுக்தமா என்பது தான் விசாரம். அது யுக்தமன்று. அதில் உதாஸீநரான கவர்ன்மெண்டார் ப்ரவேசிக்க மாட்டாரென நம்புகின்றோம்.

# தத்வவிசாரம்.

ஸ்ரீ பாஷ்யகாரரும், 'ஸம்ஸார நிவ்ருத்திஃ ஸக்தி ரூபா வந்நாபாஸநவுர்ந்க வரமபுருஷ வ்ரஸாதலஸப்யா', (இந்த ரூபமான ஸம்ஸார நிவ்ருத்தியானது பக்தி ரூபத்தை யடைந்த உபாஸநத்தால் ப்ரீதனன பரமபுருஷன் ப்ரஸாதத்தால் உண்டாகத்தக்கது) என்று அருளிச்செய்கின்றார். தேசிகனும், நமஃஸஃப் தார்த்த விமர்சை செய்யுமிடம், "அவித்யா கர்ம தத்வாஸய வாஸநா ருசி ப்ரக்ருதி ஸம்பந்தாதி ரூபமான ஸர்வாநிஷ்டமும் அத்யந்த நிவ்ருத்தமாக வேணுமென்று அபேக்ஷித்ததாயிற்று. இப்படி அநிஷ்டநிவ்ருத்தியை ப்ரார்த்தித்தால் இஷ்டப்ராப்தியை அபேக்ஷிக்க வேணுமோ? * * * 'யயா நக்ரு யதெ ஜ்யோத்ஸ்நா ஸவ்யக்ஷாஜநாநிணஃ । தோஷவ்யஸாணா நஜ்ஞாந ஸாதநஃ க்ரியதெ தயா ॥ * * * தயா ஹெயமாணாம்வஸாநுவதெவாயா ஷயொமாணாஃ । வ்ரகாஸ்யெ தெ நஜநேதெ நித்யா ஸவாதலநா ஹிதெ'॥ என்று சொல்லுகிறபடியே இஷ்டப்ராப்தி தானே வாரோதோ என்னில், * * * தன் அபராதத்தாலே ஸ்வதஃ ப்ராப்தமான தேவை (கைங்கர்யத்தை) இழந்து கிடக்கிற இவன் என்கூறு நான் பெற வேணும்; அதற்காக என் அபராதத்தைப் பொறுத்தருள வேணும் என்று அபேக்ஷிக்கையில் விரோதமில்லை. இத்தால் ப்ரதிபந்தக நிவ்ருத்தியில், மாணிக்கத்தொளியும் * * * நியதை யான ஈஶ்வரேச்சையாலே பரம்புமாபோலே, இங்கும் ஸ்வாபாவிகமான ஜ்ஞாந விகாஸாதிகள் ஸஹஜகாருண்ய ரூபையான ஈஶ்வரேச்சையாலே வருகின்றன வென்னுமிடம் தோற்றுகிறது"

என்று அருளிச்செய்கின்றார். 'க்ஷவிட்யாநிவ்ருத்திரேவஹி மோக்ஷ:' எனும் வாக்ய தாத்பர்யத்தைப்பற்றி, ஸர்வாநிஷ்ட நிவ்ருத்திக்குப் பின்னால் உத்தராவஸ்தை முழுவதும் அநுகூலரூபமாக இருக்குமென்று வாதிக்கின்றார். எல்லாம் பகவத் ப்ரஸாத ஜந்யம். பக்தி யோகத்தால் உபாஸகனிடம் ப்ரீதனான பகவான், கேவலம் தனது க்ருபையால் அவனுக்கு ஸ்வரூபத்தைக் காட்டுகின்றான். ஈச்வரன் ஸ்வதந்த்ரனாகிலும், பக்தியோக நிஷ்டனுக்கு நியமேந அநுக்ரஹம் செய்வதால் அவனை உபாஸித்தவன் அவனை அடைகின்றானென்று உபநிஷத் கூறியது. அன்றியும், ஹ்ருதயத்தில் பற்றியிருக்கும் ஸர்வகாமங்களும் எப்போது அதைவிட்டு நீங்குமோ, அப்போது உபாஸகன் அம்ருதனாகி இவ்வுலகிலேயே உபாஸந வேளையில் ப்ரஹ்மாநுபவம் பண்ணுகின்றான் என்றும், அந்த ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரம் உண்டானவளவில், ஹ்ருதயத்தின் கட்டுகள் அறுபட்டு, ஸர்வ ஸந்தேஹங்களும் நிவ்ருத்தமாகி, ஸர்வகாமங்களும் க்ஷயிக்கின்றன என்றும், உபநிஷத் வாக்யங்கள் உண்டு. இவற்றின் ஸமுதாயார்த்தம் என்னவென்றால்: உபாஸந நிஷ்பத்தி யுண்டாகில் பகவத் ப்ரஸாதமுண்டாய், அவித்யை, கர்மம், பூர்வ வாஸனை முதலிய ஸர்வ அநிஷ்டங்களும் இவனை விட்டு விலகுகின்றன. இந்த உபாஸகனுக்கு ஸ்வரூப ப்ராப்தி யுண்டாகின்றது. அவனது ஜ்ஞாநம் ஸங்கோசமற்று ப்ரகாசிக்க அவனுக்கு ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரம் உண்டாகின்றது. ஸாக்ஷாத் கரித்த பரமாத்மாவை அநுபவிக்காமல் தரிக்கமாட்டானாதலால், ஸ்வரூபாந்தர்கதமானதும், அநுபவ ரூபமானதுமான இவனது மோக்ஷவ்ருத்தி இவனுக்கு ப்ராப்தமாகின்றது.

இந்த உபாஸநம், ஆவ்ருத்யதிகரணத்தில், ஸ்ம்ருதி மாத்ரம் அன்றென்றும், ஸ்ம்ருதி ஸந்ததிரூபம் என்றும், ஏகாக்ரசித்த வ்ருத்தியின் நைரந்தர்யம் என்றும், அஸக்ருத் ஆவ்ருத்தமான ஸந்தத ஸ்ம்ருதி யென்றும், ஸ்ரீ பாஷ்யகார வசநமிருக்கின்றபடியை நோக்கினால், அஷ்டாங்கயோக க்ரமம் ஸ்வாமியால் சிந்திக்கப் பட்டிருக்க வேண்டும் என்றாகின்றது. பின்னால் ஸூத்ரங்களில் ச்ருதியை அநுஸரித்து, உபாஸந ஸம்பந்தமாக ஆஸநம், த்யாநம், நிச்சலத்வம், தேசம், காலம் இவை சிந்திக்கப்பட்டுமிருக்கின்றன. ஆனபடியால் அந்த யோகக்ரமத்தைச் சிறிது விசாரிப்போம்.

'யொாமயாஙூ யஈ௦யொாமீ யஂஜாெநாஹ்யஷியீயதே ।
விநிஷ்டநுஸஈாயிஸ்த பாநம்ப்ரஹ்மாவஞ்ஞபீஈாது ॥
யஜூ௦தராயதொஷெண டிஷ்யதேவாஸ்ய ஈாநஸ௦ ।
ஜ்ஞாநநெராஹ்யஸதோ ஈஂக்தி: வஞ்ஞவஞஸ்ய ஜாயதே ॥
விநிஷ்டநுஸஈாயிஸ்த ஈஂக்தி௦ தசெத்ரவ ஜந்தி ।
ப்ராப்நாதி யொாமீ யொாமாக்நி உஜ்ஜகஈூவயொாவிராசு ॥
ஸ்ரூஹ்வய ஈஹி௦ஸா௦வ ஸத்யாஷ்டயாவபிரஹாது ।
ஸெவேத யொாமீ நிக்ஷாஈோ யொாமஹ்தா௦ ஸ்வஈெநாநயது ॥
ஸ்வாயப்ராயஸுளவஸ௦தாஷ தவா௦வி நியதாத்வாது ।
காவீஞதவ்ர ஹ்மணி தயா வாஸ்விது ப்ரவண௦ ஈந: ॥
ஊதெ யஈாஸ்ஸநியஈா: வ௦வ௦வ கீதிஞசா: ।
விஶிஷ்ட ஹஜூா: காஈ்யா நிக்ஷாஈாநா௦ விஈாக்திஜா: ॥
ஊக௦ ஹஜ்ராஸநாதீநா௦ ஸஈாஸ்யாய மாெணயஞகத: ।
யஈாவெ்யநியஞஈாவெ்யஶ்ச யாஂஜீத நியதோ யதி: ॥
ப்ராணாவ்யஈநீய௦ வஶ்ய௦ குஹ்யாஸாசு காராதெதாயசு ।
ப்ராணாயாஈைஸ்ஸ விஜெதவ்ய: ஸபீஜொபீஜஹவஹ' ॥

* * *

'ஶஷ்பாதிஷ்டநாஈக்தாநி நிஹ்ரஹ்யாக்ஷாணி யொாமவிசு ।
காஈ்யாசு வித்தாநகாரிணீ ப்ரத்யாஹாரவாராயண: ' ॥

* * *

'வாணாயாஈேந வவநெ ப்ரத்யாஹாரெண செ௦ரி்யெ ।
வஶீக்ருதெ ததஃகாயஞாசு ஸ்திதம்செத: ஶாஹாஶ்ரயெ' ॥

* * *

'ஶாஹாஶ்ரய: ஸவித்தஸ்ய ஸவஞஈஸ்யாவஊாத்ஜந: ।
த்ரஹாவஹாவநாதீத: ஈஂக்தயெ யொாமிமாநரூவ ॥
கமெநுஸ்தா வாராஷவ்யாஹ்ய செதஸொயெ வ்யவாஶ்ரயா: ।
கஶாஜாஷெ ஸஈ்ஸ்தாஸ்த ஜெவாஜ்யா: கஈஞயொாநய: ' ॥

* * *

‘𑌯𑌚𑍍𑌚𑌮𑍂𑌰𑍍𑌤𑌂 𑌹𑌰𑍇𑌰𑍂𑌪𑌂 𑌯𑌾𑌦𑍃𑌕𑍍 𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌂 𑌨𑌰𑌾𑌧𑌿𑌪 ।
𑌤𑌚𑍍𑌛𑍍𑌰𑍂𑌯𑌤𑌾𑌂 𑌅𑌨𑌾𑌧𑌾𑌰𑌾 𑌧𑌾𑌰𑌣𑌾 𑌨𑍋𑌪𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 ॥
𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑌵𑌦𑌨𑌂 𑌚𑌾𑌰𑍁𑌪𑌦𑍍𑌮𑌪𑌤𑍍𑌰𑌾𑌯𑌤𑍇𑌕𑍍𑌷𑌣𑌂 ।
𑌸𑍁𑌕𑌪𑍋𑌲𑌂 𑌸𑍁𑌵𑌿𑌸𑍍𑌤𑍀𑌰𑍍𑌣𑌲𑌲𑌾𑌟𑌫𑌲𑌕𑍋𑌜𑍍𑌜𑍍𑌵𑌲𑌂 ॥
𑌸𑌮𑌕𑌰𑍍𑌣𑌾𑌨𑍍𑌤𑌵𑌿𑌨𑍍𑌯𑌸𑍍𑌤 𑌚𑌾𑌰𑍁𑌕𑌰𑍍𑌣𑌵𑌿𑌭𑍂𑌷𑌣𑌂 ।
𑌕𑌮𑍍𑌬𑍁𑌗𑍍𑌰𑍀𑌵𑌂 𑌸𑍁𑌵𑌿𑌸𑍍𑌤𑍀𑌰𑍍𑌣𑌶𑍍𑌰𑍀𑌵𑌤𑍍𑌸𑌾𑌙𑍍𑌕𑌿𑌤𑌵𑌕𑍍𑌷𑌸𑌂 ॥
𑌵𑌲𑌿𑌤𑍍𑌰𑌿𑌭𑌙𑍍𑌗𑌿𑌨𑌾 𑌮𑌗𑍍𑌨𑌨𑌾𑌭𑌿𑌨𑌾 𑌹𑍍𑌯𑍁𑌦𑌰𑍇𑌣 𑌚 ।
𑌪𑍍𑌰𑌲𑌮𑍍𑌬𑌾𑌷𑍍𑌟𑌭𑍁𑌜𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌮𑌥𑌵𑌾𑌪𑌿 𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑍁𑌜𑌂 ।
𑌸𑌮𑌸𑍍𑌥𑌿𑌤𑍋𑌰𑍁𑌜𑌙𑍍𑌘𑌂 𑌚 𑌸𑍁𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌙𑍍𑌘𑍍𑌰𑌿𑌵𑌰𑌾𑌮𑍍𑌬𑍁𑌜𑌂 ॥
𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑍇𑌚𑍍𑌚 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌭𑍂𑌤𑌂 𑌤𑌂 𑌪𑍀𑌤𑌨𑌿𑌰𑍍𑌮𑌲𑌵𑌾𑌸𑌸𑌂 ।
𑌕𑌿𑌰𑍀𑌟𑌹𑌾𑌰𑌕𑍇𑌯𑍂𑌰𑌕𑌟𑌕𑌾𑌦𑌿𑌵𑌿𑌭𑍂𑌷𑌿𑌤𑌂 ।
𑌶𑌾𑌰𑍍𑌙𑍍𑌗𑌶𑌙𑍍𑌖𑌗𑌦𑌾𑌖𑌡𑍍𑌗 𑌚𑌕𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑌵𑌲𑌯𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌂 ।
𑌵𑌰𑌦𑌾𑌭𑌯𑌹𑌸𑍍𑌤𑌂 𑌚 𑌮𑍁𑌦𑍍𑌰𑌿𑌕𑌾𑌰𑌤𑍍𑌨𑌭𑍂𑌷𑌿𑌤𑌂 ॥
𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑍇𑌚𑍍𑌚 𑌤𑌨𑍍𑌮𑌯𑍋 𑌯𑍋𑌗𑍀 𑌸𑌮𑌾𑌧𑌾𑌯𑌾𑌤𑍍𑌮𑌮𑌾𑌨𑌸𑌂 ।
𑌤𑌾𑌵𑌚𑍍𑌚 𑌯𑌾𑌵𑌚𑍍𑌚 𑌦𑍃𑌢𑍀𑌭𑍂𑌤𑌾 𑌤𑌤𑍍𑌰𑍈𑌵 𑌨𑍃𑌪 𑌧𑌾𑌰𑌣𑌾 ॥
𑌵𑍍𑌰𑌜𑌤𑌸𑍍𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑍋𑌨𑍍𑌯𑌦𑍍𑌵𑌾 𑌸𑍍𑌵𑍇𑌚𑍍𑌛𑌯𑌾 𑌕𑌰𑍍𑌮𑌕𑍁𑌰𑍍𑌵𑌤𑌃 ।
𑌨𑌾𑌪𑌯𑌾𑌤𑌿 𑌯𑌦𑌾 𑌚𑌿𑌤𑍍𑌤𑌾𑌤𑍍 𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌂 𑌮𑌨𑍍𑌯𑍇𑌤 𑌤𑌾𑌂 𑌤𑌦𑌾 ॥
𑌤𑌤𑌃 𑌶𑌙𑍍𑌖𑌗𑌦𑌾𑌚𑌕𑍍𑌰𑌶𑌾𑌰𑍍𑌙𑍍𑌗𑌾𑌦𑌿𑌰𑌹𑌿𑌤𑌂 𑌬𑍁𑌧𑌃 ।
𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑍇𑌚𑍍𑌚 𑌭𑌗𑌵𑌦𑍍𑌰𑍂𑌪𑌂 𑌪𑍍𑌰𑌶𑌾𑌨𑍍𑌤𑌂 𑌸𑌾𑌕𑍍𑌷𑌸𑍂𑌤𑍍𑌰𑌕𑌂 ॥
𑌸𑌾 𑌯𑌦𑌾 𑌧𑌾𑌰𑌣𑌾 𑌤𑌦𑍍𑌵𑌦𑌵𑌸𑍍𑌥𑌾𑌨𑌵𑌤𑍀 𑌤𑌤𑌃 ।
𑌕𑌿𑌰𑍀𑌟𑌕𑍇𑌯𑍂𑌰𑌮𑍁𑌖𑍈𑌰𑍍𑌭𑍂𑌷𑌣𑍈𑌰𑌹𑌿𑌤𑌂 𑌸𑍍𑌮𑌰𑍇𑌤𑍍 ॥
𑌤𑌦𑍇𑌕𑌾𑌵𑌯𑌵𑌂 𑌦𑍇𑌵𑌂 𑌚𑍇𑌤𑌸𑌾𑌹𑌿 𑌪𑍁𑌨𑌰𑍍𑌬𑍁𑌧𑌃 ।
𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍𑌤𑌤𑍋𑌵𑌯𑌵𑌿𑌨𑌿 𑌪𑍍𑌰𑌣𑌿𑌧𑌾𑌨𑌪𑌰𑍋 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥
𑌤𑌦𑍍𑌰𑍂𑌪𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌾 𑌚𑍈𑌕𑌾 𑌸𑌨𑍍𑌤𑌤𑌿𑌶𑍍𑌚𑌾𑌨𑍍𑌯𑌨𑌿𑌸𑍍𑌪𑍃𑌹𑌾 ।
𑌤𑌦𑍍𑌧𑍍𑌯𑌾𑌨𑌂 𑌪𑍍𑌰𑌥𑌮𑍈𑌰𑌙𑍍𑌗𑍈𑌃 𑌷𑌡𑍍𑌭𑌿𑌰𑍍𑌨𑌿𑌷𑍍𑌪𑌾𑌦𑍍𑌯𑌤𑍇 𑌨𑍃𑌪 ॥
𑌤𑌸𑍍𑌯𑍈𑌵 𑌕𑌲𑍍𑌪𑌨𑌾𑌹𑍀𑌨𑌂 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌗𑍍𑌰𑌹𑌣𑌂 𑌹𑌿 𑌯𑌤𑍍 ।
𑌮𑌨𑌸𑌾 𑌧𑍍𑌯𑌾𑌨𑌨𑌿𑌷𑍍𑌪𑌾𑌦𑍍𑌯𑌂 𑌸𑌮𑌾𑌧𑌿𑌃 𑌸𑍋𑌽𑌭𑌿𑌧𑍀𑌯𑌤𑍇’ ॥

* * *

'𑌤𑌦𑍍𑌭𑌾𑌵𑌭𑌾𑌵𑌮𑌾𑌪𑌨𑍍𑌨𑌸𑍍𑌤𑌤𑍋𑌽𑌸𑍌 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 ।
𑌭𑌵𑌤𑍍𑌯𑌭𑍇𑌦𑍀 𑌭𑍇𑌦𑌶𑍍𑌚 𑌤𑌸𑍍𑌯𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌕𑍃𑌤𑍋 𑌭𑌵𑍇𑌤𑍍' ॥

"யோகாப்யாஸம் செய்கின்ற யோகியானவன் யோகநிஷ்பத்திக்குப் பூர்வம் யோகயுக் என்றும், பரமாத்ம ஸாக்ஷாத்காரமடைந்த பிறகு நிஷ்பந்நஸமாதி என்றும் வ்யவஹரிக்கப்படுகிறான். யோகயுக் என்பவனுடைய மநஸ்ஸானது, ஆலஸ்யம் முதலான பத்து வித விக்நங்களால் தூஷிக்கப்பட்டதாகில், யோகம் அநேக ஜந்மங்களாக அப்யஸிக்கப்பட்ட பிறகு, அவனுக்கு முக்தியுண்டாகும். நிஷ்பந்நஸமாதி எனப்பட்ட யோகியானவன், தனது யோகாக்நியால் ஸர்வ கர்மங்களையும் தஹித்துவிட்டு, அதே ஜந்மத்தில் விளம்பமின்றி முக்தியை அடைகின்றான். யோகத்தில் ப்ரக்ராந்தனான யோகியானவன், அந்த விஷயத்தில் தன் மநஸ்ஸுக்கு யோக்யதையை உண்டாக்கும் பொருட்டு, ப்ரஹ்மசர்யம், அஹிம்ஸை, ஸத்யம், பரத்ரவ்யங்களை அபஹரிக்காமை, நிஷித்த த்ரவ்யங்களைக் கொள்ளாமை முதலான தர்மங்களை நிஷ்காமனாய் இருந்துகொண்டு அப்யஸிக்கக்கடவன். மேலும், புத்தியை நிச்சலமாய் நிறுத்தி ஸ்வாத்யாயம், சௌசம், ஸந்தோஷம், தபஸ்ஸு முதலானவற்றை அப்யஸிக்கக்கடவன்; அப்படியே பரப்ரஹ்மத்தினிடம் தன் மநஸ்ஸை பக்தியுடன் செலுத்தக்கடவன். இப்படி ஐந்து யமங்களும் ஐந்து நியமங்களும் சொல்லப்பட்டன. இவை காமத்தால் அப்யஸிப்பவர்க்கு விசேஷித்துப் பலனளிக்கும்; காமமின்றி அநுஷ்டிப்பவர்க்கு முக்தியைக் கொடுக்கும். யோகத்தில் யதசீலனாய், நியமயுக்தனாய், யமம் நியமம் என விவரிக்கப்பட்ட குணங்களுடன் கூடினவனாய், பத்ராஸநம் முதலாகிய ஆஸநங்களுக்குள் ஒன்றில் இருந்துகொண்டு, யோகாப்யாஸம் செய்யக்கடவன். அப்யாஸத்தால் ப்ராணவாயுவை வசீகரணம் செய்கின்றான்; அது ப்ராணாயாமமென்று அறியத்தக்கது. அது பகவானுடைய மூர்த்தியின் த்யாந ஸஹிதமான மந்த்ரத்துடன் கூடியதாகில் ஸபீஜமென்றும், இல்லாததாகில் அபீஜமென்றும் சொல்லப்படுகின்றது."

* * * * * *

"யோகப்ரகார மறிந்தவன் சப்தாதி விஷயங்களில் ஸதா ப்ரவ்ருத்தமாகின்ற இந்த்ரியங்களை அவற்றினின்றும் திருப்பி, ப்ரத்

யாஹார ஸாதந நிமித்தமாக அவற்றைத் தனது சித்தவ்ருத்தியை அநுஸரிப்பவைகளாகப் பண்ணக்கடவன்."

*    *    *    *    *    *

"ப்ராணயாமத்தால் ப்ராணவாயுவும், ப்ரத்யாஹாரத்தால் இந்த்ரியங்களும், வஶீகரணமான பிறகு மநஸ்ஸை ஶுபமான ஆஶ்ரயமாகின்ற பகவானுடைய மூர்த்திதனில் நிலைக்கும்படிச் செய்யக்கடவன்."

*    *    *    *    *    *

"யோகிகளின் முக்தியின் பொருட்டு, எங்கும் ஓடுவதும், சஞ்சல ஸ்வரூபத்துடன் கூடினதுமான அவருடைய சித்தத்துக்குக் கர்மபாவனை, ப்ரஹ்மபாவனை, உபயபாவனை எனப்பட்ட மூன்று பாவனைகளையும் கடந்த அந்தப் பகவான் ஶுபமான ஆஶ்ரயமாகின்றான். ஓ புருஷஶ்ரேஷ்டனே! மற்ற யாவரேனும் மநஸ்ஸுக்கு ஆஶ்ரயமாகி நின்றாராகில் அவரெல்லோரும் அஶுத்தர். ஏனெனில் அப்படிப்பட்ட தேவர் முதலானோர் கர்ம நிமித்த ஜன்ம முடையவர்கள்."

*    *    *    *    *    *

"இவ்வண்ணம் ஆஶ்ரயமாகும் யாதொரு ஹரியினுடைய ஸ்தூலரூபம் உளதோ, அது இவ்விதமாகச் சிந்திக்கத்தக்க தென்பதைப்பற்றிக் கேளும், ஓ ராஜனே! ஆலம்பநமின்றித் தாரணையானது முடியாது. ஆதலால் ப்ரஸாதாபிமுகமான முகமென்ன, தாமரை யிதழையொத்த அழகிய கண்களென்ன, நன்கமைந்த கன்னங்களென்ன, எழிலும் காந்தியும் பொருந்திய விஸ்தீர்ணமான பலகையொத்த நெற்றியென்ன, இருசெவி முற்றும் பொருந்தி அணியப்பட்ட திவ்ய குண்டலாபரணங்களென்ன, மூன்று ரேகைகளுடன் கூடிய ஶங்கமொத்த கண்டமென்ன, சீருடன் வளர்ந்து ஸ்ரீவத்ஸத்தால் அலங்க்ருதமான மார்பென்ன, மூன்றுமடிப்பில் மறைந்துநின்ற நாபியுடன் கூடிய உதரமென்ன, நீண்ட அஷ்டபுஜங்களோ, சதுர்புஜங்களோவென்ன, ஒன்றோடொன்று ஒத்தமைந்த தொடைகளும் முழங்கால்களுமென்ன, வடிவார்ந்த பாத கமலங்க

ளென்ன, இவற்றுடன் கூடினவனும், நிர்மலமான பீதாம்பர வஸ்த்ரதாரியாயும், கிரீடம், ஹாரம், கேயூரம், கடகம் முதலான திவ்யபூஷணங்களால் அலங்க்ருதனும், ஶார்ங்கம், ஶங்கம், கதை, கட்கம், சக்ரம் முதலான திவ்யாயுதங்கள், அக்ஷமாலை முதலானவற்றைத் தரிக்கின்றவனும், வரதஹஸ்தம், அபயஹஸ்தம் இவற்றுடன் கூடினவனும், முத்ரிகா ரத்நத்தால் பூஷிதனும் இருக்கின்ற பரப்ரஹ்மமாகிற விஷ்ணுவை, யோகியானவன் ஏகாக்ர சித்தனாகி, பகவந்மயனாய்ப் போந்து, பகவந் மூர்த்தியினிடம் தாரணையானது எவ்வளவுக்குள் த்ருடமாக நிலைக்கின்றதோ, அவ்வளவு பர்யந்தம் சிந்திக்கக்கடவன். ஓ ராஜனே! நடந்தாலும், இருந்தாலும், ஸ்வேச்சையால் வேறு எந்த கார்யம் செய்தாலும், எக்காலம் பகவந்மூர்த்தியானது சித்தத்தினின்று வெளிப்படாது நிற்குமோ, அப்போது அந்தத் தாரணை த்ருடமாக ஸித்தித்ததாக எண்ணக்கடவன். பிறகு ஶங்கம், கதை, சக்ரம், ஶார்ங்கம் முதலான திவ்யாயுதங்களின்றி, கிரீடாதி பூஷணவிஶிஷ்டமாய் அக்ஷமாலையுடன் கூடி மிகவும் ஶாந்தமாயிருக்கும் பகவந் மூர்த்தியைப் புத்திமானான யோகீ சிந்திக்கக்கடவன். அந்த மூர்த்தியினது தாரணையானது முன்னுரைத்தபடி எப்போது நிலைத்து நிற்கின்றதோ, அப்போது கிரீடம், கேயூரம் முதலான பூஷணங்களின்றி மூர்த்திமாத்ர ஸ்மரணம் செய்யக்கடவன். இதன் பிறகு ப்ரத்யங்க ரஹிதனும், ப்ரதாநமான ஏகாவயவத்துடன் கூடினவனும், பகவானைப் புத்திமான் சிந்திக்கக்கடவன். பிறகு, (மேல் விவரித்தபடி நாலுரூபமான தாரணையை ஸமர்த்தித்த பின்,) ஆயுத பூஷண ப்ரத்யங்க ப்ரதாநாங்கங்கள் ஆகிய அவயவங்கள் எந்தப் பகவானால் லீலார்த்தம் க்ரஹிக்கப்பட்டனவோ, அந்த அவயவியாகின்ற பகவானிடம் சித்தத்தை ஸ்திரப்படுத்தி த்யாநபரனாகக்கடவன். இப்படித் தாரணையால் ஸித்தித்த பகவத்ரூபவிஷயமான ஸ்மரணையானது, யாதொரு விச்சேதமின்றி, அதைத் தவிர வேறு ஸ்மரணை இடையில் வராமல், அந்த ஸ்மரணமாத்ரத்தினுடைய ப்ரவாஹரூபமாக நிலைத்ததாகில், அதற்கு த்யாந

மென்று பெயர். அது யமம் முதல் தாரணை பர்யந்தமான ஆறு அங்கங்களால் நிஷ்பந்நமாகின்றது. விக்ரஹாதி விஶிஷ்டனுக மேல்சொன்னபடி த்யாநிக்கப்பட்ட அந்தப் பகவானுடைய விக்ரஹாதி விஶேஷரஹிதமான யாதொரு ஸ்வரூபம் த்யாநத்தில் ஸாக்ஷாத்கரிக்கப்பட்டு மநஸால் க்ரஹிக்கப்படுகின்றதோ; அந்த க்ரஹணத்தை ஸமாதியெனச் சொல்லப்படுகின்றது."

* * * * * *

"அந்தப் பகவானுடைய அபஹதபாப்மத்வாதி கல்யாண குணங்களின் ஆவிர்பாவத்தை அந்த ஸமாதியில் உபாஸகன் அடைந்தவனுய்க்கொண்டு, பரமாத்மாவை யொத்து ஜ்ஞாநாநந்த விஶிஷ்டனுகப் பரமாத்மாவுடன் ஸமாநாகாரனுகின்ருன். இதைத் தவிர இவன் பூர்வமடைந்துநின்ற தேவநாமநுஷ்யாதி ஆகார பேதங்கள் இவன் அஜ்ஞாநத்தின்பொருட்டு உண்டாகிநின்றன."

உபநிஷத் வித்யைகளிலும், ரூபகுணவிஶிஷ்டனுகப் பகவானுடைய உபாஸநம் செய்ய விதித்திருக்கின்றது. ஏனென்ருல், இப்படிக்கன்றிச் சித்தத்துக்கு ஆலம்பநம் ஏற்படாது. ஆலம்பநமின்றித் தாரணையில்லை. தாரணையின்றி த்யாநம் இல்லை. த்யாநமின்றி அதனுடைய எல்லையாகும் ஸமாதியெனும் ப்ரஹ்மஸ்வரூப ஸாக்ஷாத்காரமில்லை. ஆதலால் ப்ருதியில் ஓரிடம் ஆதித்யமண்டலாந்தர்வர்த்தியாயும், ஸ்வர்ணமய திவ்யமங்களவிக்ரஹவிஶிஷ்டனுயும், புண்டாரீகாக்ஷனுயும் உத் எனும் பேருடையனுகவும், பகவானை உபாஸிக்க விதித்திருக்கின்றது. மற்ருேரிடம் மநோமயனுகவும் ப்ராணஶரீரனுகவும், ப்ரகாஶரூபனுகவும், ஸத்யகாமாதி குணவிஶிஷ்டனுகவும் உபாஸிக்கச் சொல்லி இருக்கின்றது. இன்னுமோரிடம், அக்நியை ஶிரஸ்ஸாகவும், சந்த்ர ஸூர்யர்களைக் கண்களாகவும், திக்குகளைக் காதுகளாகவும், வாயுவை ப்ராணனுகவும், ப்ரபஞ்சத்தை ஹ்ருதயமாகவும், பகவானுக்கு ரூபகல்பநம் செய்து உபாஸிக்கச் சொல்லியிருக்கின்றது. இப்படி நாமரூபகுணவிஶிஷ்டனுகவே, தேவர்கள் உள்பட ஸர்வஶரீரமுடையவரால் பரமபுருஷன் உபாஸிக்கத்தக்கவன். அவனுடைய அவ

தார காலங்களிலும், அவன் பக்தர்களுக் கிரங்கித் தனது தர்ஶந மளித்த காலங்களிலும், அவன் காட்டிநின்ற உருவங்களைக்குறித்து, ஸ்ரீ விஷ்ணுபுராணத்தினுடைய மேலெடுத்த ஶ்லோகங்கள், யோக காலத்தில் சிந்திக்கவேண்டிய பகவானுடைய ரூபத்தை வர்ணித்தன.

'𑌶𑍍𑌰𑍀𑌵𑌤𑍍𑌸𑌵𑌕𑍍𑌷𑌾 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌾 𑌸𑍀𑌤𑌾𑌯𑌾𑌜𑌮𑌦𑌿𑌵𑍍𑌰𑌹𑌃 ।
𑌰𑌕𑍍𑌤𑌰𑌾𑌜𑍀𑌵𑌨𑌯𑌨𑌃 𑌯𑌨𑍍𑌤𑍍𑌰𑌶𑍍𑌶𑍍𑌰𑌕𑌾𑌂𑌕𑌿𑌤𑌃' ॥

என்று ஸ்ரீராமனுடைய உபாஸ்தியை ஸாத்வத ஸம்ஹிதையில் விதித்திருக்கின்றது. இவை யாவும் மனோகல்பிதமான விக்ரஹங்கள். இவை ப்ரபுத்தரெனப்பட்ட யோகநிஷ்டர்களுக்கு த்யாந விஷயமாகின்றன. ப்ராயேண மநுஷ்யர் யோகத்தில் அதிகாரிகள் அல்லர். அவர்களுக்கென்று திவ்யமங்களவிக்ரஹங்கள் ஏற்பட்டன. அந்தர்யாமியை இவர் உபாஸிக்க ஒண்ணுதென்றும், யோகிகளுக்கே அவ்வுபாஸநத்தில் அதிகாரமென்றும் காட்டும்,

'𑌕𑍍𑌷𑌾𑌂𑌤𑌯𑍋𑌗𑌵𑌿𑌧𑌾𑌨𑌾𑌂 𑌹𑍃𑌦𑍍𑌯𑌾𑌮𑌨𑌿𑌰𑌤𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌂 ।
𑌯𑍋𑌗𑌿𑌨𑌾𑌮𑌧𑌿𑌕𑌾𑌰𑌸𑍍𑌯 𑌨𑌕𑍍𑌷𑌿𑌤𑌂 𑌹𑍃𑌦𑌯𑍇𑌶𑌯𑍇' ॥

எனும் ஶ்லோகத்தைத் தேசிகனும் தத்வத்ரயாதிகாரத்தில் எடுத்திருக்கிறுர். அவ்விடமே, "அர்ச்சாவதாரமும் மோக்ஷத்தைத் தருமென்னுமிடத்தை

'𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰𑌾𑌵𑌾𑌂𑌶𑍍𑌯 𑌶𑌕𑍍𑌤𑌿𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌃 𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑌵𑌦𑌨𑍇𑌕𑍍𑌷𑌣𑌂 ।
𑌕𑍃𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌕𑌰𑌂 𑌸𑍁𑌵𑌰𑍍𑌣𑌰𑌜𑌤𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 ॥
𑌤𑌾𑌮𑌰𑍍𑌚𑌯𑍇𑌚 𑌤𑌾𑌂 𑌪𑍍𑌰𑌣𑌮𑍇𑌚 𑌤𑌾𑌂 𑌯𑌜𑍇𑌚 𑌤𑌾𑌂 𑌵𑌿𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑍇𑌚 ।
𑌵𑌿𑌶𑌤𑍍𑌯𑌪𑌾𑌸𑍍𑌤𑌦𑍋𑌷𑌸𑍍𑌤𑍁 𑌤𑌾𑌮𑍇𑌵𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌰𑍂𑌪𑌿𑌣𑍀𑌂' ॥

என்று ஸ்ரீசௌநகபகவான் அருளிச்செய்தான். ஆழ்வார்களும் இவ்வவதார ரஹஸ்யத்தையும், அர்ச்சாவதாரவைலக்ஷண்யத்தையும் ப்ரசுரமாக அநுஸந்தித்து, இதற்குப் பேரணியாகப் பரத்வத்தைக் கண்டு போந்தார்கள்" என்று ஸாதித்தருளினர். இன்னும்

உத்தரக்ருத்யாதிகாரத்திலும், 'நித்யஸித்தே ததாகாரே தத்பரத்வே ச பௌஷ்கர । யஸ்யாஸ்தி ஸத்தா ஹ்ருதயே தஸ்யாஸௌ ஸந்நிதிம் வ்ரஜேத்' ॥ என்றும், * * * சொல்லுகிறபடியே, ஓர் அதிகாரி விசேஷத்துக்காக ஸாங்நித்யாதிகளைப் பண்ணி, பரமை காந்தியான தன்னை யுகந்துவந்து அர்ச்சாவதாரம் பண்ணியிருக்கிற எம்பெருமான் பக்கலிலே, 'ஸர்வாதிஶாயிஷாட்குண்யம் ஸம்ஹிதம் [illegible] பிம்பயோ:' ।, என்கிற பூர்த்தியும், '[illegible]' ॥, என்கிற பாவநதமத்வத்தையும், '[illegible]', என்கிறபடியே ப்ரத்யக்ஷாதி ப்ரமாண த்ரயத்திலும் ஹேது பலபாவத்தாலே வரும் மதிமயக்குகளெல்லா வற்றுக்கும் மருந்தாயிருக்கிறபடியையும், '[illegible]', என்றும் 'தமருகந்ததெவ்வுருவம்' என்கிற பாட்டிலும் சொல்லுகிறபடியே வாங்மநஸாபரிச்சேத்ய மான ஆச்ரித பாரதந்த்ரியத்தையும், கண்ட கண்கள் மற்றொன் றைக் காணா என்கிற ஆகர்ஷகத்வத்தையும், அநுஸந்தித்து, '[illegible]' ।, என்கிறபடியே அவ்வோஸம் பந்த வர்க்க பரத்வ ஸௌலப்யாதிகளுக்கு அநுரூபமான வ்ருத்தி யைப் பண்ணவும், அப்போது, '[illegible]' ।, என்று

திருவடி நிலைகள் விஷயத்தில் ஸ்ரீ பரதாழ்வான் நடத்தின ராஜ ஸேவகவ்ருத்தியை ஸ்வார்ஜித த்ரவ்யங்களாலே நடத்தவும்" என்கிறபடியே க்ருதக்ருத்யர்களுக்கு உத்தர க்ருத்யம் இருக்கவேண்டியபடியை ஸாதிக்குமிடம், அர்ச்சாவதாரம் செய்திருக்கும் எம்பெருமானிடம் அது மிகவும் த்ருப்திகரமாக நடக்குமென்று காட்டியருளினர்.

இப்படி மோக்ஷ ஸ்வரூபத்தையும், அதை யடைவதற்கு உபாயமாயிருக்கப்பட்ட உபாஸநத்தின் ஸ்வரூபத்தையும், அந்த உபாஸநத்துக்கு அதிகாரிகளாகத்தக்கவருக்கு அவச்யமாயிருக்கும் விசேஷகுணங்களையும், இவற்றைப்பற்றி விவரிக்குமிடத்தே, உபாஸநத்துக்கென்று உபநிஷத்வித்யைகளில் த்யாந விஷயமாக எடுக்கப்பட்ட பகவானுடைய நாமரூபவிசிஷ்டமான மூர்த்திகளையும், இப்படிப்பட்ட மநோகல்பிதமான விக்ரஹவிசிஷ்டனாகவே பகவான் த்யாநிக்கத்தக்கவன் என்பதையும், இதிஹாஸ புராணங்களில், இந்த த்யாநமெனப்பட்ட உபாஸந க்ரமத்தை யோகசப்தத்தால் வ்யவஹரிக்கப்படுகின்றதென்பதையும், அந்த யோகத்தின் அங்கங்களையும், அந்த ப்ரகரணங்களில் த்யேயமாகும் பகவத்விக்ரஹத்தை வர்ணிக்குமிடம், பகவதவதாராதிகளில் நமக்கு ஸித்தித்தபடிப் பகவானுடைய த்யாநவிஷயமாகும் மூர்த்திகள் வர்ணிக்கப்பட்டிருக்கின்றதையும், பிற்காலத்தில் ஆகமநிஷ்டர்களாலும், ஆழ்வார் ஆசார்யர்களாலும், நம்முடைய பெரியோர்களாலும், பகவானுடைய அர்ச்சாரூபமான மூர்த்திகள் நமக்கு ஆராதந, த்யாந, ப்ரணம, ஸேவாதிகளுக்கு யோக்யமாகும் ப்ரகாரத்தையும் பற்றிச் சற்று விசாரித்தோம்.

பத்ராதிபர்.

# ஶ்ரீ வைகுண்ட நிர்ணயம்.

ஶ்ரீமான் வேங்கடநாதார்ய꞉ கவிதார்க்கிககேஸரீ ।
வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி ॥
ஶாகாஸஹஸ்ரஸ்தா ஶாகாஸஹஸ்ரேஷு நகேஶோவா க்ஷயேஶ்வேஹ ।
வ்ருணீதே ஹ வ தத்ப்ரேக்ஷ்ய ஸம்வ்ருதீ ஜமதாம்வதீ ॥

ஸ்ரீயஃபதியாய், நிகிலஹேயப்ரத்யநீக கல்யாணகுணைக தானனுய், ஸர்வசேஷியான ஸ்ரீமந்நாராயணன் கேவலம் பரத்வத்தில் நித்யவிபுவாய் எழுந்தருளியிருக்கும் இடம் சுத்த ஸத்வ ரூபமான ஸ்ரீ வைகுண்டம் என்பர். அது ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்திகளுக்கு அஸாதாரணமானதோர் ப்ரதிதந்த்ரமல்லவோ? ‘வைகுண்டே து பரே லோகே ஶ்ரியா ஸார்த்தம் ஜகத்பதி꞉’ இத்யாதி வசநங்களால் ஓதப்படுகிற ஸ்ரீ வைகுண்டம் எங்கென்னில், ஸ்ரீயஃபதியான ஸ்ரீநிவாஸன் எழுந்தருளியிருக்கும் திருமலையே தான் என்று நிரூபிக்கலாகும். இதற்கு அடியென் என்னில்:— ‘ஶ்ருதிஶிரஸி விதீப்தே ப்ரஹ்மணி ஶ்ரீநிவாஸே’ என்பதில் ஶ்ருதி என்பது திருமலையே என்றும், அதன் சிரஸ்ஸில் விதீப்தமான திருவேங்கடமுடையானே, இங்கு சொல்லப்பட்ட ‘ப்ரஹ்மணி ஶ்ரீநிவாஸே’ என்றும், ப்ரத்யக்ஷத்தாலும் ப்ரமாணத்தாலும் காணலாம். ஸ்ரீமத் ரஹஸயத்ரயஸாரத்திலும், ஸ்தாநவிசேஷாதிகாரத்தில் ‘வேங்கட வெற்பென விளங்கும் வேத வெற்பே’ என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரமானது, உத்ப்ரேக்ஷை அதிசயோக்தி, உபமாநம் முதலிய அலங்காரபூரிதமான காவ்யக்ரந்தமன்றிக்கே, கேவலம் தத்வநிரூபணம் பண்ணுகிற ப்ரமாண க்ரந்தம். அது அவ்வோஸ்தாநங்களின் விசேஷங்களைப் பரக்கச்சொல்லும்போது, அதைக் கேவலம் ப்ரமாணவசநமாகவே நினைக்கவேண்டும். இவ்விடத்தில் திருமலையை ஶ்ருதி

ஸ்வரூபமாகச் சொன்னதும் தவிர, 'திண்ணமிது வீடென்னத் திகழும் வெற்பு' என்றும், 'பொன்னுலகம்' என்றும் சொல்லப் பட்டிருக்கிறது. இந்த விசேஷ சப்தங்களெல்லாம் ஸ்ரீ வைகுண் டமன்றிக்கே, ஸ்தாநாந்தரங்கள் ஒன்றுக்கும் ஒட்டாது. நம்மாழ் வாரும் 'ஒழிவில் காலமெல்லாம்,' 'சோதியாகி யெல்லாவுலகும் தொழும் ஆதிமூர்த்தி,' என்று அருளிச்செய்தார். இப்பாசுரங் களை ஸம்ஸ்க்ருதத்தில் ஸங்க்ரஹிக்கும் போது, நம் தேசிகன் 'ஸ்யோமோநா த்க்ஷராசு வ்யாவ்யாஹதம் ஸ்யாநம்' என்று உபயோகித் துள்ளார். 'இருப்பிடம் வைகுந்தம் வேங்கடம்' 'வடவேங்கட மாமலை வானவர்கள் சந்தி செய்ய நின்றான்,' என்னும் ஆழ்வார் கள் அருளிச்செயல்கள் அநேகம் இவ்விஷயத்தில் ஆதாரமாகச் சொல்லலாமாகிலும், இங்கு ஸாரதமமான ப்ரமாணங்களே எடுத் துச் சொல்லப்பட்டன. இவ்விஷயத்தை இன்னும் ஸ்பஷ்டமாக வும் விளம்பரமாகவும் நம் ஆசார்யன் நிகமநாதிகாரத்தில் காட்டி யுள்ளார். அவ்வதிகாரத்தில், ஸ்ரீ வைகுண்டத்தில் பரமாத்மா வாஸுதேவனுடைய திவ்யமங்கள விக்ரஹத்தைச் சொல்லுமள வில், முடிவில், "பரமபத பர்யங்கத்திலே எழுந்தருளியிருக்கிற ஸபத்நீகனான ஸர்வேச்வரன் தாளிணைக் கீழ் ஒழிவில் காலமெல் லாமுடனாய் மன்னி வழுவில்லா அடிமை செய்யவேண்டும் நாம் என்கிற மநோரதத்தின்படியே ஸர்வதேச ஸர்வகால ஸர்வா வஸ்தோசித ஸர்வ வித கைங்கர்யங்களையும் பெற்று வாழ்வார் கள். இப்படி ஸ்ரீயஃபதியான நாராயணன் திருவடிகளே உபாய தசையிலும் பலதசையிலும் உபஜீவ்யங்கள்" என்கிறார். ஆகையால் உபாயதசையாகிற முமுக்ஷுதசையிலும், பலதசையாகிற முக்த தசையிலும் கூட அநுபவிக்கவேண்டுமான ஸ்தாநம் ஒன்றே என்று தெரியலாயிற்று. இங்கு ஒழுவில் காலம் என்பதை அநு ஸந்தித்ததும், இப்படி ஸ்ரீயஃபதியான என்பதையும் மறக்கலா காது. பரமபதமென்பது ப்ரக்ருதிமண்டலத்துக்கு மேற்பட்ட ஸ்தாநத்திலிருக்கிறதென்று அநாதி ஸம்ப்ரதாயமிருக்க, ப்ரக்ருதி மண்டலத்திலேயே ஸ்தாபிக்குமது வம்புதானே என்று சிலர் ஆக்ஷேபிக்கிறார்கள். ஸம்ப்ரதாய விருத்தமான நிர்ணயம் யாருக்

கும் ஸார்த்தமாவது, புருஷார்த்தமாவது ஆகமாட்டாது என்பதை மறக்கவில்லை. கேவலம் தார்க்கிகர்களைப்போல யுக்தி வாதம் மாத்ரமே பண்ணுவதற்கு இது அர்ஹமான விஷயமுமன்று. மேல் கீழ் என்பது உத்க்ருஷ்டத்வ அபக்ருஷ்டத்வ வாச்யங்களன்றிக்கே, ஊர்த்வாதரத்வங்கள் என்று பாவிக்கவேண்டுமோ? ஒரு கடத்தில் உதகத்தைச் சேர்த்து அதில் மணல், சுண்ணும்பு, லவணம், சர்க்கரை முதலானவைகளைக் கலந்து, அவைகளை விவரித்துச் சொல்லும்போது, அவைகளில் மேன்மையானது சர்க்கரை என்னலாமல்லவோ? ஓர் கூட்டத்தில் குரு சிஷ்ய ப்ரசிஷ்ய ரெல்லாரும் கூடியிருக்குமளவில் சிஷ்ய ப்ரசிஷ்ய வர்க்கங்களைக் கீழாகவும், இவ்வர்க்கம் கீழே அநந்தமாகப் போவது போலவும், மேலே போகும்போது குரு என்கிற ஒரு எல்லை ஏற்படுவது போலவும், இந்தக் கூட்டத்தில் எல்லாவற்றுக்கும் மேலானது குரு வென்றும் வசிப்பது அநுபவஸித்தமல்லவா? இங்கு உபரிசப்தம் ஸ்தல உந்நதத்வத்தால் வந்ததல்லவே. இதை உதாஹரணமாகக் கண்டுகொள்வது. இதெல்லாம் ஸ்ரீ வைகுண்ட நிர்ணயத்தில் அஸம்பாவிதமாகாதோ என்னில், அன்று. பக்தரான நமக்கு ஜல தரு பாஷாணுதி ஸ்வரூபத்தில் மலையாகவும், அர்ச்சாரூபத்தில் திருவேங்கடமுடையானுகவும் ஸேவை கொடுக்குமிடத்திலேயே கர்ப்பிதமாய், ஸ்ரீ வைகுண்டத்தையும் ஸ்ரீமந் நாராயணனையும் நாமே முக்ததசையில் காணலாம். ஒரு கடத்தில் உதகத்தைச் சேர்த்து அதில் சர்க்கரையைக் கலந்தால், பார்க்குமவர்க்கு ஜலமாகவே தோன்றுமேயாகிலும், ருசி பார்க்கையில், அல்லது ஏதேனுமொரு சக்தியுள்ள கண்ணுடி முதலான உபாயாந்தரங்களால் ஶோதிக்கையில் சர்க்கரை இருப்பதைத் தெரிந்து கொள்வது போலவும், தசாபேதத்தினுலே இந்தத் திவ்ய நகரிலே ஸ்ரீ வைகுண்டத்தைப் பார்ப்போம் என்பதற்கு யாதொரு ஸம்சயமுமில்லை. ஆகையாலிறே, “வ்யவஸ்தி₂தம் இஹாம் வ்யாயஃ ஸ்ரீநிவாஸாத் ஸமந்ததஃ । ஐக்ஷ்வாகஸ்ய வம்ஶஸ்ய யத்ரஸ்தி₂தம்ரா ஶங்க்ரமாயிதம் ॥” என்று ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் அரு

ளிச்செய்தார். இந்த ஸம்பந்தம் சரீரசரீரி ஸம்பந்தம் போலவும், சேதநாசேதநங்களுக்கும் ஈசுவரனுக்குமுள்ள சரீராத்ம பாவ ஸம்பந்தம் போலவுமாகும். திருமலை ஆதிசேஷன் என்பதையும் ப்ரமாண மாக்கிக்கொண்டு 'நின்றால் குடையா மிருந்தால் சிங்கா தனமாம்' என்பதும் இங்கு அநுபவஸித்தம். ஆகையாலிறே நாம் ஸ்ரீ வைகுண்டத்தையும் ஸ்ரீமந்நாராயணனையும் த்யாநிக்கும் போதெல்லாம் திருமலையையும், அங்கே மற்றொரு திவ்யதேசம் போல் அன்றிக்கே, அஸாதாரணமாக மற்றொரு நாச்சியாரில்லா மல் வக்ஷஸ்தலத்திலே ஸ்ரீ மஹாலக்ஷ்மியைத் தரித்துக்கொண்டு 'ஹ்ரீஸ்ருதெ ஶ்ரீஸ்வ வநெ௩்ௗ,' 'கூலெஹாராதெ௩்வாலொ' எனும்படி நிற்கும் திருவேங்கட முடையானையுமே த்யாநிக்க வேண்டுமென்று ஆயிற்று. திருவேங்கடமுடையான் தான் ஸ்ரீமந் நாராயணன் என்பதை ஆழ்வார் திருமந்திரத்துக்கீடாக "வேங் கடத்துறைவ ரமுதமோவெனலாம் கடைமை" அதாவது 'நமோ வெஂகடேமாய' என்றும் மஹா அஷ்டாக்ஷரியை அநுஸந்தித் தாரிறே.

இதில் வாசகதோஷங்கள் இருந்தால், பாலனுடைய தோஷ யுக்தமான வாசகங்களே பெரியோர்களுக்கு உகப்பாயிருக்குமாப் போல், இதில் விஷய ப்ராமாணிகத்வத்தைப்பற்றி அடியே னுக்கு யாதொரு பீதியும் ஸந்தேஹமும் தட்டவில்லை. ஏனெ னில், நம்முடைய ஸம்ப்ரதாய க்ரந்தங்களில் ஈஷத்தேனும் வாஸ னையில்லாத இந்த அல்ப சேதநனுக்கு இது திருவேங்கடமுடை யானது க்ருபாகடாக்ஷத்தால் 'நீசனேன் நிறைவொன்றுமிலேன் என்கண் பாசம் வைத்த பரஞ்சுடர் சோதிக்கே', என்னுமாப் போலே ப்ரஸாதிக்கப்பட்ட நீதியானதால் அடியேனுக்கு ஸம் பூர்ணமும் அவிச்சேதமுமான நம்பிக்கை இதில் உண்டாயிற்று.

திருப்பதி சேட்லூர் ராஜகோபால தாஸன் என்கிற
துரைஸாமி அய்யங்கார்,
(சித்தூர்.)

ஸ்ரீரஸ்து.

# வதூ வித்யா விசாரம்.

ப்ரஹ்ம மீமாம்ஸையில் விசாரித்த அபசூத்ராதிகரணந்யாயம் ஸ்த்ரீகள் விஷயத்திலும் ப்ரவர்த்தித்து, ஸ்த்ரீகளுக்கு ப்ரஹ்ம வித்யையில் அதிகாரமில்லை என்று நிர்ணயித்துக் கொடுக்கமாட்டாதா என்று விசாரிப்போம். இதில் ஸ்த்ரீ புருஷ விசேஷமின்றிக்கே, ‘ஆத்மா வா அரே த்ரஷ்டவ்யஶ்ஶ்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்யோ மைத்ரேயி,’ இத்யாதி ப்ரமாணங்களால் ப்ரஹ்மவித்யாதிகாரம் எல்லோர்க்கும் ப்ராப்தமாயிருக்க, அதில் ஸ்த்ரீகளுடைய ப்ரஹ்மவித்யாதிகாரத்தை மாத்ரம், அபசூத்ராதிகரணந்யாயமோ இன்னும் வேறு ப்ரமாணங்களோ பாதிக்க மாட்டாதென்று நாம் எண்ணுகிறோம். ததாஹி, தேவதாதிகரணமத்வதிகரணங்களில் தேவதைகள் எல்லார்க்கும், எல்லா ப்ரஹ்ம வித்யையிலும் அதிகாரமுண்டென்று ஸ்தாபித்தபிறகு, அதிகார ப்ரஸங்கத்தால் சூத்ரர்களுக்கும் ப்ரஹ்மவித்யையில் அதிகாரம் உண்டா இல்லையா என்று விசாரித்து நிர்ணயிக்க, ஏழு ஸூத்ரங்களடங்கிய அபசூத்ராதிகரணம் ப்ரவர்த்தித்தது. அதில் மூன்று ஸூத்ரங்களால், சூத்ரருக்கு ப்ரஹ்மவித்யையில் அதிகாரத்தை ஸாதிப்பதற்குச் சொன்ன லிங்கம் பாதிக்கப்படுகிறது. மேல் நான்கு ஸூத்ரங்களால் சூத்ரருக்கு ப்ரஹ்மவித்யையில் அதிகாரமில்லை என்பதற்கு ப்ரமாணங்கள் சொல்லப்படுகின்றன. அந்த அதிகரணத்துக்கு ‘ஜாநஶ்ருதிர்ஹ பௌத்ராயண:,’ என்று தொடங்கி பௌத்ரபுத்ரராயும் ஜாநச்ருதியென்று ப்ரஸித்தி பெற்ற ஒருவர், ‘ஶ்ரத்தயா தேய:, அஶ்ரத்தயாதேயம்,’ என்கிற ஶாஸ்த்ரப்படி, ஶ்ரத்தையோடு பஹு தானங்களைச் செய்துகொண்டும் அன்னதானார்த்தம் பஹு பாகசாலியர்யு மிருந்தார். அவர்

ஸர்வதேசங்களிலிருந்தும் அதித்யாதிகள் வந்து நமது அந்நத்தைப் புசிப்பார்கள் என்று எண்ணி, பஹு ச்ரத்தையோடு, ஸர்வ திக்குகளிலும், க்ராமங்களிலும், மார்க்கங்களிலும், அரண்யாதி களிலும் வந்து தங்கும் வழிப்போக்கர்களுக்கும், ஏழை ஜநங்க ளுக்கும், சீதவாத ஆதபவாரணங்களான கம்பளங்களாலும், அந்ந பாநாதிகளாலும், சயநாதிகளாலும், வஸ்த்ரங்களாலும், பரிபூர்ண மாயிருந்த அந்நசாலே, மடம், ஸத்ரம் முதலியவற்றை ஏற்படுத்தி ஞர். இப்படி இருக்கும் காலத்தில், ஒருநாள் ராத்ரி, சில மஹாந் கள் இவருடைய அந்நாதி தாநங்களால் மிகவும் ஸந்தோஷத்தை யடைந்து, கேவல கர்மசீலரான இவர்க்கு, ப்ரஹ்மஜ்ஞாந ஸம்பா தநத்தில் த்வரையை உண்டுபண்ணவேண்டுமென்று எண்ணங் கொண்டு, அப்போது க்ரீஷ்ம காலத்தில் காற்றின் ஸௌகர் யார்த்தமாய் மேலுப்பரிகையில் அநாவ்ருத ப்ரதேசத்தில் ஹம்ஸ தூளிகா மஞ்சத்தில் சயநித்திருக்கும் அந்த ராஜனுடைய கண்க ளுக்கு லக்ஷ்யமாக ஹம்ஸரூபிகளாகச் சென்ருர்கள். அப்போது அந்த ஹம்ஸங்களுக்குள் பின்சென்ற ஹம்ஸமொன்று முன் செல்லும் பக்ஷியொன்றைக் கூவி "ஓ! ஓ! அல்ப த்ருஷ்டியுடன் கூடின ஹம்ஸமே! பௌத்ராயணனுன ஜாநச்ருதியின் தேஜஸ் ஸானது ஸ்வர்க்கதுல்யமாயும் மத்யாஹ்நதுல்யமாயும் வ்யாபித் திருக்கின்றது பார். அந்தத் தேஜஸ்ஸில் நீ அகப்படவேண்டாம்; அது உன்னைத் தஹிக்கவும் வேண்டாம்" என்று சொல்லிற்று. இப்படி ஜாநச்ருதியின் ப்ரசம்ஸையைக் கேட்ட முன்சென்ற ஹம்ஸம், அந்த வார்த்தைகளை ஸஹிக்காததுபோல் "ஓ! ஹம் ஸமே! என்ன மாஹாத்ம்யமுடையவனுக எண்ணி, ப்ரஹ்ம வித்தமராய் மஹாப்ராஜ்ஞராய் சகடத்திலிருக்கும் ரைக்வரைப் போல் நினைத்து, கேவலகர்மடனாய் அப்ரஹ்மவித்தாய் இருக் கும் இந்த ஜாநச்ருதியை ப்ரசம்ஸிக்கிருய்?" என்று ப்ரத்யுத் தரம் சொல்லிற்று. பின் சென்ற ஹம்ஸம் "நீ சொல்லும் ரைக் வர் எப்படிப்பட்ட ப்ரபாவமுடையவர்?" என்று கேட்டது. முன் செல்லும் ஹம்ஸம் "ஓ மித்ரா! லோகத்தில் க்ருதமென்றும், த்ரேதையென்றும், த்வாபரமென்றும், கலியென்றும் நான்கு த்யூ

தங்களுண்டு. அவற்றுள் க்ருதம் நான்கு அங்கங்களுடையது; த்ரேதை மூன்றங்கங்களும், த்வாபரம் இரண்டங்கங்களும், கலி ஓரங்கமு முடையன. 'ஸர்வே பஞ்சாஸத்' எனும் ந்யாயத்தால், க்ருதத்தில் இதர மூன்று த்யூதங்களும் அந்தர்க்தங்கள். க்ருதத்தை ஜயித்தால் இதர த்யூதங்களும் ஜயித்த ப்ராயமாம். க்ருதத்தில் எப்படி இதர த்யூதங்கள் உள்ளடங்கினவோ, அப்படியே லோகத்தில் செய்யப்பட்ட ஸர்வ ஸுபகர்மங்களும் எவரது கர்மத்தில் அந்தர்பூதங்களோ, எவர் அறிந்திருப்பதை லோகத்தில் ஸர்வ ஜ்ஞாதாக்களும் அறிகின்றார்களோ அவர்தான் நான் மொழிந்த ரைக்வர்'' என்று விடை தந்தது. இப்படி ஜாநஸ்ருதி கேட்கும்படியாகவே ஹம்ஸரூபிகளான மஹாபுருஷர்கள் சொல்லிக் கொண்டே மறைந்தனர். ஜாநஸ்ருதியும் ப்ரஹ்மவித்தான ரைக்வ ப்ரஸம்ஸாரூபமாயும், ப்ரஹ்மஜ்ஞான மில்லாதபடியால் தனது நிந்தாரூபமாயும் ப்ரவர்த்தித்த ஹம்ஸோக்திகளைக் கேட்டு, ஸோகாக்ராந்தனாய்க் கஷ்டப்பட்டுக்கொண்டு அவ்விரவை ஓர் யுகம் போல் போக்கினான். காலையில் எழுந்து,

'வைஸ்யாச்ச ப்ராஹ்மண்யாம் க்ஷத்தா நாம வ்ஜாயதே ஜீவிகாவ்ருத்திரஸ்ய ராஜாம் தௌவாரரக்ஷணம்'

என்று சொல்லுகிறபடி ப்ரதிலோம ஜாதியில் பிறந்தவனும், தனக்கு ப்ரேஷ்யனுமான ஒரு க்ஷத்தாவை அழைத்து, "ஓ மித்ர! சென்ற ராத்ரியில் சில ஹம்ஸங்கள் என் கட்டிலுக்கு நேர்மேலாக ஆகாசத்தில் சென்றன. அவற்றுள் ஒன்று என்னை ஸ்தோத்ரம் செய்தது. மற்றொன்று என்னை அநாதரித்து, 'லோகத்திலுள்ள ஜ்ஞாநகர்மங்கள் யாவும் எவருடைய ஜ்ஞாநகர்மங்களில் அந்தர்க்கதங்களோ, ஸகடஸ்தரான அப்படிப்பட்ட ரைக்வரைப்போல் எண்ணி இவனை ப்ரஸம்ஸிக்கின்றாயா?' என்று சொல்லிக் கொண்டே போய்விட்டது. அதுமுதல், ப்ரஹ்மஜ்ஞானமில்லாத நான், திர்யக் ஜந்துக்களாலும் நிந்திக்கலானேனே என்று என் மனஸ் வருந்துகின்றது. ஆகையால் அந்த ரைக்வரையே நான் ப்ரஹ்ம வித்யாசார்யராக உத்தேஸித்துவிட்டேன். அவர் எங்கிருந்தபோதி

லும் சீக்ரமாக அவரைத் தேடி அவரிருப்பிடத்தை நீ அறிந்து வரவேண்டும்" என்று ஆஜ்ஞாபித்தான். க்ஷத்தாவும் ரைக்வ ரைத் தேடிவந்து அவர் இருக்குமிடம் தெரியவில்லை யென்று ஜாநச்ருதியுடன் சொல்ல, ஜாச்ருதி வருந்தி, 'க்ஷாத்தா! ப்ரஹ்மவித்துக்களான மஹான்கள் வஸிக்கும் அரண்யங்கள், நதி புளிநங்கள், ஆச்ரமங்கள் இவற்றில் தேடிப்பார்,' என்றுரைத் தான். க்ஷத்தா மறுபடி தேடப்போய், ஒரு வண்டியின் கீழ்த் தன்னுடலைச் சொரிந்துகொண்டிருக்கும் ரைக்வர் ஸமீபத்தில் சென்று, "பகவன்! நீர் தானு ரைக்வர்?" என்றனன். அவர் ஆம் எனவே, க்ஷத்தாவும் திரும்பிப்போய் ராஜாவுக்கு ரைக்வர் இருப் பிடத்தைத் தெரிவித்தனன். உடனே ஜாநச்ருதி அறுநூறு பசுக் களையும், ஒரு ஹாரத்தையும் ஜாத்யஶ்வயுக்தமான ரதமொன் றையும் உபஹாரமாகக்கொண்டுபோய், ரைக்வரைத் திருவடி தொழுது, "ஓ ரைக்வரே! இந்த உபஹாரங்களைத் திருவுள்ளம் பற்றித் தேவரீர் உபாஸிக்கும் தேவதையை எனக்கு நன்ரு கத் தெரியும்படி உபதேசிக்கவேண்டும்" என்று விஜ்ஞாபநம் செய் தனன். அதை ரைக்வர் கேட்டு, தம்முடைய யோகப்ரபாவத் தால், ஜாநச்ருதியை ஹம்ஸங்கள் அநாதரித்ததையும், அப்படி அநாதரகர்ப்பமான வாக்யத்தைக் கேட்டதுமுதல் அவன் சோகா விஷ்டனுய் இருப்பதையும், அவனுக்கு ப்ரஹ்மவித்யையை ஸம் பாதிப்பதில் உடனே உத்யோக முண்டானதையும் நன்கறிந்தவ ராய், அவனுக்கு ப்ரஹ்மவித்யோபதேசாநுகுணமான யோக்யதை இருந்தபோதிலும், "ஸம்வத்ஸரம் தஉயபும்வா ாஸத்ருயஉயாவிவா । வரிக்ஷ்ய விவியொவாவெயஃ க்ஷ்ரவயா யீஸ்ரவெஷா வவெஉசு ।" என்று சொல்லப்பட்ட பரீக்ஷையும் சிரகால ஸேவையுமில்லா மல், "வக்ஷவெஒ ந யவிநநவா," என்று சொல்லப்பட்ட இரண் டாவது படியும் தவிர்ந்து, ஸ்வல்பமான அர்த்த ப்ரதாநத்தால் கடுக உபதேசித்தால் அவனுக்கு ப்ரஹ்மவித்யை ப்ரதிஷ்டிதமாகா தென்று நிச்சயித்துப் புன்சிரிப்புடன், "ஓ! சோகாவிஷ்டனுன ஜாநச்ருதியே! ஹாரமும் தேரும் இந்தப் பசுக்களும் உம்மிடமே

இருக்கட்டும். க்ராமமும் க்ரஹமும் களத்ரமு மற்ற எனக்கு இவற்றின் ரக்ஷணத்தில் ஶக்தியில்லை. இந்தப் பொருள்களை ப்ரதி க்ரஹித்துக்கொண்டு, அவற்றால் ஆகர்ஷிக்கப்பட்டவனாக நான் உமக்கு ப்ரஹ்மவித்யையை உபதேசிக்கமுடியாது” என்று சொன்னார். அதைக் கேட்டு, இங்கிதமறிந்த ஜாநஶ்ருதியும், சிர காலஸேவையு மில்லாமல், விஶேஷமாக அர்த்த வ்ரயமும் இல் லாமல், தான் கொண்டுவந்த ஸ்வல்ப உபஹாரத்திற்காகத் தனக் குக் கடுக ப்ரஹ்மவித்யையை உபதேசிக்க ரைக்வருக்குத் திரு வுள்ளமில்லை யென்பதை அறிந்துகொண்டு திரும்பினான். மறு படியும் ஆயிரம் பசுக்களையும், ஶ்ரேஷ்டமான ஹாரத்தையும், ஜாத்யஶ்வயுக்தமான தேரையும், கந்நிகாதாநார்த்தமாகத் தன் பெண்ணையும் கொண்டுபோய், “ஸ்வாமிந்! இதோ ஆயிரம் பசுக் கள், இதோ கண்டபூஷணம், இதோ ஜாத்யஶ்வஸஹிதமான ரதம், இதோ தேவரீர்க்குப் பத்ந்யர்த்தமாக அடியேனுடைய கந்நிகை. இந்தக்ராமம் இனித் தேவரீர்க்கு ஸொந்தமானது. இவற்றைத் திருவுள்ளம்பற்றி அடியேனுக்கு ப்ரஹ்மவித்யையை உபதேசிக்க வேண்டும். மிகவும் ஆர்த்தனான அடியேனைத் திரஸ்கரிக்கக் கூடாது” என்று சொல்லி ப்ரார்த்தித்தான். ரைக்வரும் ஜாந ஶ்ருதியினுடைய ப்ரஹ்மவித்யோபதேசத்துக்கு உபாயபூதங்க ளான உபஹாரங்களை அங்கீகரித்து, “ஆஜஹாரேமா: ஶூத்ர அனேனைவ முகேநாலாபயிஷ்யதா,” ஹே! ஶூத்ர! இந்தத் தக்ஷிணைகளைக் கொண்டுவந்தாய். இந்த உபாயத்தாலேயே என்னை ப்ரஹ்மவித்யோபதேசத்தை (உனக்குப்) பண்ணும்படிச் செய் விக்கின்றாய்” என்று சொல்லி, ஜாநஶ்ருதிக்கு ஸம்வர்க்க வித் யையை ரைக்வர் உபதேசித்தார். இந்த ஆக்யாயிகை யடங்கிய சாந்தோக்யோபநிஷத் நாலாவது ப்ரபாடகத்தின் ஆரம்பம் முதல், சில கண்டங்கள் அபஶூத்ராதிகரணத்துக்கு விஷயம்.

“ஆஜஹாரேமா: ஶூத்ர” எனும் வாக்யப்படி ரைக்வர் ஶூத்ர என்று ஜாநஶ்ருதியை ஸம்போதித்து ப்ரஹ்மவித்யையை உபதேஶித்தபடியாலும், ஶூத்ரர்களுக்கும் அர்த்தித்வ ஸாமர்த்

யாதிகள் உண்டாகையாலும், "ஶ்ராவயேச்சதுரோவர்ணாந் க்ருத்வா ப்ராஹ்மணமக்ரத:" என்று அநுமதி பண்ணப்பட்ட பாரதாதி ஶ்ரவண ஜநித ஜ்ஞாநத்தையும், ஸ்வவர்ணோசிதமான பூர்வ வர்ண ஶுஶ்ருஷாதி ரூபகர்மங்களையும் கொண்டு, சூத்ரர்களும் ப்ரஹ்மவித்யை ஸம்பாதிக்கலா மாகையாலும், அவர்க்கும் ப்ரஹ்மவித்யையில் அதிகாரம் உண்டென்று பூர்வபக்ஷம்பண்ணி, சூத்ரர்க்குப் பாரதாதி ஶ்ரவணாநுமதி பாபஶாந்த்யர்த்தமென்று அங்குள்ள ப்ரமாணங்களால் ஏற்படுகையாலும் வேதாத்யயந யோக்யதை யில்லாதவனுக்கு வேதோபப்ரஹ்மணம் வ்யர்த்த மாகையாலும், ஜாநஶ்ருத்யுபாக்யாநத்திலுள்ள சூத்ரசப்தத்திற்கு ஶோகாவிஷ்டன் என்று அர்த்தமாகையாலும், சூத்ரனுக்கு ப்ரஹ்மவித்யையில் அதிகாரமில்லையென்று, "ஶுகஸ்ய, ததநாதரஶ்ரவணாத், ததாத்ரவணாத், ஸூச்யதே ஹி" என்கிற முதல் ஸூத்ரத்தில் ஸித்தாந்தம்பண்ணி யிருக்கின்றது. "க்ஷத்ரியத்வ கதேஶ்ச, உத்தரத்ர சைத்ரரதேந லிங்காத்," என்கிற மேலிரண்டு ஸூத்ரங்களால் ஜாநஶ்ருதி க்ஷத்ரியன் என்பதற்கு லிங்கங்கள் சொல்லப்பட்டன.

இதனுல் சூத்ருக்கு ப்ரஹ்வித்யாதிகாரம் இல்லையென்று ஏற்படுமே யொழிய ஸ்த்ரீகளுக்கு அதிகாரமில்லை யென்று ஏற்படாது. இந்த ந்யாயத்தை அதிதேசிக்கவும் முடியாது.

ந்யாயவிருத்தமான சூத்ராதிகாரத்தில் ஒருவித லிங்கமும் இல்லையென்று மேற்குறித்த ஸூத்ரங்களால் சொல்லி, ந்யாய ஸித்தமாக சூத்ரர்களுக்கு அநதிகாரம் ஶ்ருதி ஸ்ம்ருதிகளால் அநுக்ரஹிக்கப்படுகின்றதென்று மேல்வருகின்ற, 'ஸம்ஸ்காரபராமர்ஶாத் ததபாவாபிலாபாச்ச' இத்யாதி ஸூத்ரங்களில் சொல்லுகிருர். அதில் 'ஸம்ஸ்காரபராமர்ஶாத்' என்கிற ஸூத்ரத்தில் ப்ரஹ்மவித்யையை உபதேஶிக்கும்போது உபநயந ஸம்ஸ்காரம் பராமர்ஶிக்கப்படுகையாலும், மந்வாதிகள் 'நஶூத்ரே பாதகம் கிஞ்சித் நச ஸம்ஸ்காரமர்ஹதி । வர்ணாநாமாநுபூர்வ்யேண அதூஜாதி:,'

இத்யாதிகளில், சூத்ரனுக்கு ஸந்த்யாவந்தநாத்யதிக்ரம ப்ரயுக்த தோஷமில்லை; அவன் உபநயநாதி ஸம்ஸ்காரங்களுக்கு அர்ஹ னன்று; அவன் ஏகஜாதி; த்விஜாதியன்று என்று ஏற்படுகின் றமையால், அவனுக்கு ப்ரஹ்மவித்யையில் அநதிகாரமே ந்யா யம் என்று நிர்ணயித்தார்.

ஸ்த்ரீகள் விஷயத்திலோ, 'வைவாஹிகொ விதிஃ ஸ்த்ரீணாம் ஔபநாயநிகொ மதஃ,' என்று மநுவும், 'விவாஹம் சோபநயநம் ஸ்த்ரீணாமாஹ பிதாமஹஃ। தஸ்மாச் ச வைவாஹிகஃ ஸ்ம்ருதஃ ஜந்மதொ வாஷு வக்தவ்யஃ॥' என்று யமனும், விவாஹத்தையே ஸ்த்ரீ களுக்கு உபநயநமாகச் சொல்லுகையாலும், ஸ்த்ரீகளுக்கு விவா ஹம் முதற்கொண்டு, உபநீதர்களுக்குப்போல், ஆசௌச விதாய சாஸ்த்ரமும், ததநுஷ்டாநமு மிருக்கையாலும், த்ரைவர்ணிக ஸ்த்ரீகளும் த்விஜாதியாகையாலும், மேற்குறித்த ஸூத்ரந்யாயம் ஸ்த்ரீகள் விஷயத்தில் ப்ரவர்த்தியாது.

'ததபாவ நிர்தாரணே ச ப்ரவ்ருத்தேஃ,' என்கிற மேல் ஸூத்ரத்தின் விஷயம் என்னவென்றால்: ஸத்யகாமன் தன் தாயான ஜபாலையைப் பார்த்து "ஓ மாதாவே! நான் ப்ரஹ்மசர்யத்தை அடையவேண்டுமென்று எண்ணுகிறேன்; என்னுடைய கோத்ரம் என்ன? அதைச் சொல்" என்று கேட்டான். தாயும், "அப்பா! நான் யௌவந காலத்தில் பர்த்தாவின் க்ரஹத்தில் தேவபித்ர தித்யப்யாகதர்களுடைய பரிசர்யையில் நிரதையாக இருந்த ஸமயத்தில் உன்னைப் பெற்றேன். அப்போது ஶுச்ரூஷை யில் வ்யாப்ருதமான மநஸ்கையான நான், உனது கோத்ரத்தை அறிந்துகொள்ளாமல் போனேன். ஆகையால் நீ ஆசார்யனி டம் சென்று இந்த வ்ருத்தாந்தத்தைச் சொல். 'நான் ஜபாலா புத்ரன்: என் பெயர் ஸத்யகாமன்' என்று நீ சொன்னையானல் அவர் உனக்கு உபநயநாதிகளைப் பண்ணிவைப்பர்" என்று சொன்னள். ஸத்யகாமனும் ஹரித்ருமத் புத்ரராகிய கௌதமரை யடைந்து "ஓ பகவன்! ப்ரஹ்மசர்யார்த்தம் ஶிஷ்யனாக உம்மை அடைகின்றேன். என்னை ஶிஷ்யனாகத் திருவுள்ளம்பற்று

வேண்டும்'' என்று ப்ரார்த்தித்தான். கௌதமரும், "அப்பா! உன் கோத்ரமென்ன?'' என்று கேட்டார். அவனும் தாயார் சொன்னபடி அவரிடம் விஜ்ஞாபித்துத் தனது கோத்ரம் தனக்குத் தெரியாதென்று சொன்னான். கௌதமரும், "அப்பா! ஸத்யகாம! தாமஸப்ரக்ருதியாய் ஜனித்துக் குடிலபுத்தியுடன் கூடிய ஶூத்ரன் விநயான்விதமாக இவ்விதம் சொல்லமாட்டான். இந்த வார்த்தைகளைச் சொன்ன நீ, ப்ராஹ்மணனாகவே இருக்கவேண்டும்''. 'ஸமிதம் ஸோம்யாஹர உப த்வா நேஷ்யே' என்று சொல்லி அவனுக்கு உபநயநத்தைப் பண்ணிவைத்தார். அவனுடைய சிரகாலஸேவையால் ஸந்துஷ்டராகி ப்ரஹ்மவித்யையையும் உபதேசித்தார். இந்தச் சாந்தோக்யத்திலுள்ள கதையைப் பராமர்சித்தால், ஸத்யகாமன் சூத்ரனன்று என்று நிர்த்தாரணம் பிறந்த பிறகே, ப்ரஹ்மவித்யையைக் கௌதமர் அவர்க்கு உபதேசிக்க ப்ரவர்த்தித்தார் என்று ஏற்படுகிறது. ஆதலால் சூத்ரனுக்கு ப்ராஹ்மவித்யையில் அதிகாரம் இல்லையென்று ஏற்படுகிறது. இதனால் த்ரைவர்ணிக ஸ்த்ரீகளின் ப்ரஹ்மவித்யாதிகாரத்திற்கு ஈஷத் பாதகமும் ஏற்படமாட்டாது. 'ஶ்ரவணாத்யயநார்த்த ப்ரதிஷேதாச்ச,' என்பதுமேல் குறித்த ஸூத்ரத்திற்கு மேல் ஸூத்ரம். 'பத்யு ஹ வா ஏதத் ஶ்மஶாநம் யச்சூத்ரஸ் தஸ்மாச் சூத்ர ஸமீபே நாத்யேதவ்யம்,' என்கிற வாக்யத்தில், சூத்ரனென்பவன் ஜங்கமமான ஶ்மஶாநமாகையால், அவன் ஸமீபத்தில் வேதாத்யயநம் செய்யக்கூடாதென்று நிஷேதிக்கையால், சூத்ரனுக்கு வேத ஶப்த ஶ்ரவணம் அர்த்தாத் ஸித்தமாகையாலும், ஶ்ரவண ப்ரதிஷேதத்தாலேயே அத்யயந வேதார்த்த ஜ்ஞானானுஷ்டானங்களுடைய நிஷேதங்களும் ஸித்தமாகையாலும், சூத்ரனுக்கு வேத ஜ்ஞானபூர்வக ப்ரஹ்மவித்யையில், அதிகாரமில்லையென்பது இந்த ஸூத்ரத்திற்கு அர்த்தம். ஸ்த்ரீகளுக்கு வேதஶப்த ஶ்ரவண நிஷேதமான ஶ்ருதி ஸ்ம்ருதிகள் இல்லையாகையால், மேலெடுத்த ஸூத்ரந்யாயமும் த்ரைவர்ணிக ஸ்த்ரீகள் விஷயத்தில் ப்ரவர்த்திக்காது.

'ஸ்த்ரீஶூத்ர த்விஜபந்தூநாம் த்ரயீ ந ஶ்ருதிகோசரா'.

என்கிற ஸ்ரீ பாகவத ப்ரதம ஸ்கந்த சதுர்த்தாத்யாய பஞ்சவிம்ஶத் ஶ்லோகத்தில், வேதம் ஸ்த்ரீகளின் ஶ்ரவண விஷயமாக மாட்

டாது என்று சொன்னதற்கும், ஸ்த்ரீஜாதி தாமஸ ப்ரக்ருதியாகை யால், அவர் வேதத்தைக்கேட்டு, அதன் அர்த்தத்தை அறிவ தற்கு அநர்ஹர் என்று தாத்பர்யமேயொழிய, வேத ஶப்தத்தை ஸத்ரீகள் காதுகளால் கேட்கக்கூடாதென்று தாத்பர்யமன்று. இப்படிச்சொன்னால் தான், த்விஜபந்தூ என்று த்ரைவர்ணிகா பாஸனையும் சேர எடுத்தது ஸங்கதமாகின்றது.

ஶூத்ரனுக்குப்போல் த்ரைவர்ணிகாபாஸனுக்கும் வேதஶப் தம் காதிலும் படக்கூடாதென்று சொல்லும் அநந்யதாஸித்த மான ஶாஸ்த்ராநுஷ்டாநங்களைக் காணவில்லை. மஹான்களான ஶ்ரோத்ரியர்கள் அகத்தில் குருபத்ந்யாதிகள் கேட்கும்படியாக மாணவகர்கள் வேதாத்யயநம் பண்ணுவதும், ஆவர்த்திசொல்லுவ தும், பஹு காலமாக ஶிஷ்டாநுஷ்டாநத்தில் காணப்படுகிறது. ஶூத்ரன் ஸமீபத்திலிருந்தால் வேதஶப்தத்தை ஶிஷ்டர்கள் உச்ச ரிக்கிறதில்லை யென்பது திருமழிசைப்பிரான் வ்ருத்தாந்தோப ப்ருஹ்மிதமான ஶிஷ்டாநுஷ்டாநஸித்தம். இந்த ஶிஷ்டாநுஷ்டா நத்தாலே முன் உதாஹரித்த ஸ்ரீ பாகவத ஶ்லோகத்திற்கு, நாம் முன்சொன்ன தாத்பர்யத்தையே உசிதமாகக்கொள்ள வேண்டு மென்பது ஸித்தம். ஸ்த்ரீகளுக்கு வேத ஶ்ரவண நிஷேதக ப்ர மாண மில்லாததுபோல், வேதாத்யயந நிஷேதக ஸ்பஷ்டதர ப்ரமாணமுமில்லை யென்றே மிதஜ்ஞனான நான் எண்ணுகிறேன். “ நஹி ஸ்த்ரீஶூத்ரௌ வேதமதீயாதாம்,” என்று நையாயிகர்கள் சொல் லும் ஶ்ருதி வாக்யம் அவ்வளவு ப்ராமாணிகமாகத் தோன்ற வில்லை. அது ப்ராமாணிகமாக இருந்தால் ஸ்பஷ்டதரமான அந்த ஶ்ருதிவாக்யத்தை எடுக்காமல், “ஶ்ரவணாத்யயநார்த்த ப்ரதிஷேதாத் ஸ்ம்ருதேஶ்ச,” என்கிற ப்ரமாண வாக்யத்தால், ஶூத்ரனுக்கு வேதஶ்ர வணம் நிஷேதிக்கப்படாது. அதனால் ஶப்தஶ்ரவணத்திற்கே அநர்ஹனான அவனுக்கு வேதாத்யயநம் அர்த்தாத் நிஷேதிக்கப் படுகின்றது என்று, வாசநிக நிஷேதத்தைவிட்டு ஆர்த்திகமான நிஷேதத்தை, ஸ்ரீ ராமாநுஜ பாஷ்ய ஶங்கரபாஷ்யாதிகளில் சொல்லமாட்டார்கள். ஆகையால் ப்ராமாணிக ஶிரோமணிக ளான பாஷ்யகாராதிகளுக்கு விஷயமாகாத முன்சொன்ன வாக் யம், நையாயிக கல்பிதமென்றே எண்ணுகிறோம். மேலும் பார்த் தாவின் சரமக்ரியாதிகளில் ஸ்த்ரீகளுக்கு ஸர்வமந்த்ரோச்

சாரணமும் ஸ்ம்ருகளில் விதிக்கப்பட்டிருக்கிறது. ஸ்த்ரீகளுக்கு அத்யயநம் நிஷித்தமானல், அந்த விதி விஷயமான மந்த்ரோச்சாரணம் எப்படி ஶக்யமாகும்? ஶேஷஹோமத்தில் "ஸுவ ஶ்ரூம்ஸ்வா" என்கிற மந்த்ரத்தை உச்சரித்து வதூவரனைப் பார்க்கவேண்டும் என்று ஸ்ம்ருதியில் விதிக்கப்பட்டிருக்கிறது. இப்படி அநேக வேதவாக்யங்களை ஸ்த்ரீகள் உச்சரிக்கவேண்டுமென்று தர்மஶாஸ்த்ரங்களில் விதிக்கக் காண்கின்றோம். ஸ்த்ரீகளுக்கு அத்யயந மில்லாவிட்டால் இவை யாவும் எப்படி ஸங்கதங்களாகும்? இப்படி ஸ்த்ரீகளுக்கு வேதஶ்ரவணமும், கிஞ்சித் வேதாத்யயநமும், நிஷேத விஷயமாகாத அநுஷ்டாநங்களாலும், அர்த்தாபத்தியாலும் ஸித்திக்கையால், அபேக்ஷிதங்களான அர்த்தஜ்ஞாநாநுஷ்டாநங்களும், ஸித்திக்கக் குறையில்லை. ஸ்த்ரீகளுக்கு ப்ரஹ்ம வித்யாதிகளில் அதிகாரம் உண்டென்பதற்கு ப்ரஹதாரண்யகத்திலுள்ள மைத்ரேயீ ப்ராஹ்மணமும், கார்கிப்ராஹ்மணமும், இன்னும் பாரதாதிகளிலுள்ள மஹர்ஷி ஸ்த்ரீகளின் வ்ருத்தாந்தங்களும், அநந்யதாஸித்த ப்ரமாணங்களென்று விமர்ஶிகளுக்கு விசதம். 'ஸ்வாயாயொயெ்தவ்ஃ', என்று விதிக்கப்பட்ட ஸ்வஶாகாத்யயநம் யாவத்து மில்லாவிட்டாலும், ஸ்த்ரீகளும் அர்த்தித்வ ஸாமர்த்யாதி ரூபமான அதிகார ஸம்பத்தியில் ஒரு ப்ரஹ்மவித்யையில் இழிந்தால், தது பயோகியான வேதாத்யயநாதிகளும், பர்த்ருக்ரியோபயோகி வேதாத்யயநத்தைப்போல், அர்த்தாபத்தி ப்ரமாணத்தால், அவர்களுக்கு ப்ராப்தங்களாகத் தட்டில்லை. "தஸ்ரா ஶூஜெ்ரா யஜ்ஞேநவக்ஷ்ஃ" இத்யாதி சூத்ரனுக்கு யஜ்ஞ ப்ரஹ்மவித்யா நிஷேதக ஶாஸ்த்ரங்கள்போல், த்ரைவர்ணிக ஸ்த்ரீகள் விஷயத்தில் ப்ரஹ்மவித்யா நிஷேதகமான ஶாஸ்த்ரமில்லையாதலால், ஸ்த்ரீகளுக்கு ப்ரஹ்மவித்யாதிகாரம் நிர்பாதமென்பதை ஶ்ருதப்ரகாஶிகையின் வ்யாக்யாநமான பாவப்ரகாஶிகையில் தேவதாதிகரண ப்ரதம ஸூத்ர ஶ்ருதப்ரகாஶிகா வ்யாக்யாநாவஸரத்தில், "ஸுபம்ஸாவஃ," என்று ஆரம்பித்து சொல்லப்பட்டிருக்கிறது.

(இன்னும் வரும்.)

உ. ர ம.

ஓர் விஶிஷ்டாத்வைதி.

## கடிதம்.

ஸ்ரீ வேதாந்ததீபிகை பத்ராதிபருக்கு:—

ஸ்ரீ ஸர்வ ஜகத் காரணபூதனான ஸர்வேஶ்வரனும் ஸ்ரீயஃபதித்வத்தாலே யன்றோ சிறப்பெய்தியது. அப்படிப்பட்ட லக்ஷ்மீ கடாக்ஷ நோக்கத்திற்கு எல்லைநிலமாய், “கெடுமிடராய வெல்லாம் கேசவா வென்ன, நாளும் கொடுவினை செய்யும் கூற்றின்தமர்களும் குறுககில்லார், விடமுடையரவில் பள்ளி விரும்பினான் சுரும்பலற்றும், தடமுடைவய லனந்தபுரநகர்ப் புகுதுமின்றே” என்றும், “எய்ந்த பொன்மதி ளனந்தபுர நகரெந்தை” என்றும் ஆழ்வார் திருவாய்மலர்ந்தருளியதற்கு இணங்க, நீர்வளம் நிலவளம் முதலிய பல வளங்களும் மலியப்பெற்று, இப்பாரதபூமியின் முகாரவிந்தம் போலப் பொலிவுடையதான திருவநந்தபுரத்தில் விளங்கும் ஸ்ரீ பத்மநாபதாஸ வஞ்சி பால ராமவர்ம குலசேகர கிரீடபதி மன்னே ஸுல்தான் மஹாராஜ ராஜே ராமராஜ பஹதூர் ஸ்ரீமூல மஹாராஜா அவர்கள், 23 - 11 - 14-ல் நாச்சியார் கோவில், ஸ்ரீ. உ. வே. வித்வான் அபிநவ ஸரஸ்வதீ நடாதூர் கிருஷ்ணமாசார் ஸ்வாமியை மரியாதையுடன் அழைத்து ஸம்பாஷித்து, ஷை ஸ்வாமி உபந்யஸித்த மேன்மையான விஷயங்களைப் பரிவுடன் கேட்டு ஆநந்தித்து, ஷை ஸ்வாமிக்குப் பெருமை பொருந்திய “அட்டத் தோடா வீரசங்கிலி” என்ற ஸ்வர்ண ஹஸ்தாபரணாதி ஸம்மாந ஸம்பாவனை செய்தார்கள்.

ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்ஹ தாஸன்.

(திருவநந்தபுரம்)

---

## ஸ்ரீதேசிக ப்ரபந்தம்.

இஃது, திருவஹீந்த்ரபுரம் பகவத்விஷய வித்வான் ஸ்ரீ. உ. வே. சேட்லூர் நரஸிம்ஹாசார்யர் ஸ்வாமியால், பல வ்யாக்யாநங்களுக்கு இணங்க, பிழையறப் பரிசோதிக்கப்பட்டு, அடிவரவுடனும், க்ரமமான ப்ரபந்த வரிசையுடனும், நல்ல காகிதத்தில், சுத்தமாயும், எவ்வித பிழையு மில்லாதபடி, மிக த்ருப்திகரமாக, ஸ்ரீமான் கி. ஸ்ரீராமாசார்யர், கொ. ஸுதர்சநாசார்யர், இவர்களால் அச்சிட்டு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதன் விலை ப்ரதி 1-க்கு, (முன்னிலும் 2 - அணா குறைத்து) 6 - அணாவாகும். ஸ்ரீ அஹோபில மடம் ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் விஷயமாகவும், ஸ்ரீமதாதிவண் சடகோபயதீந்த்ர மஹாதேசிகன் விஷயமாகவும் அருளிச்செய்யப்பட்ட அடைக்கலப்பத்துகளும் சேர்ந்தது, ப்ரதி 1 - க்கு 6-அணா, 6 - பையாகும். தபால் சார்ஜ் வேறு.

நமது ஸித்தாந்தத்தில் ப்ரத்தையுள்ள எல்லாரும் இந்த க்ரந்தத்தை ஆதரிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

இது, சென்னை, திருவல்லிக்கேணி தோடி வீதி 38-வது நம்பர் க்ருஹத்திலிருக்கும் கொ. ஸுதர்சநாசார்யரிடத்தில் கிடைக்கும்.